

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## ஆடி - ஆவணி

மலர் 11 ஆகஸ்ட் 2022 இதழ் 8

### பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 11 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 15 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 6 | 19 |
| AVATHAR ANTICIPATED | 21 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 23 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 25 |
| ஆவணி மாத விசேஷ தினங்கள் | 27 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 28 |
| ஸங்கர கீதை | 30 |
| விபூதியும் அதன் மகிமையும் | 34 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 40 |
| புராணக்கதை | 42 |
| மகாபாரத சுருக்கம் | 44 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 46 |



भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்





## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

# வந்தே பூ மாதரம்



பெரும் ஸத்யம், உக்ரமான ருதம், தீக்ஷை, தவம், ப்ரம்மம், யக்ஞம் இவை பூமித்தாயைத் தாங்குகின்றன. நிகழ்கால, எதிர்காலப் பொருளின் செயலின் மனைவியான மேதினி எங்களுக்கு விரிந்த உலகத்தைச் செய்வாளாக. (1)

மாணவர்கள் நடுவே அதிக கஷ்டமில்லாதவளாகி எவளுக்கு உச்சங்களும் வளர்ச்சிகளும் சரிசமங்களுமுண்டோ எவள் நானா வீர்ய ஓஷதிகளைத் தரிக்கிறாளோ அந்த வஸுமதி எங்களுக்கு செல்வமாகி விசாலமாவாளாக. (2)

எத்தரணியான தாரணியைத் தூக்கமற்று தேவர்கள் ஸதாகாலம் தப்பாமல் துணை புரிகிறார்களோ அவள் எங்களுக்குப் ப்ரியத்தையும், மதுவையும் அளித்துச் ஜோதியால் எம்மைச் செழுமை செய்வாளாக. (7)

தாரணி உனது க்ரீஷ்மம் விமரிசையாகும், மழைக்காலம் விமர்சையாகும், வசந்தமும் அப்படியே. சரத், ஹேமந்தம், சிசிரம் அனைத்தும் விமர்சையாகும். உனது ருதுக்களும், வருடங்களும், இரவும் பகலும் எமக்குப் பாலைப் பொழிக. (36)

மானிடர்கள் எந்த மேதினியில் கோஷம் செய்து கானத்துடன் நடனம் செய்கிறார்களோ எங்கு சமர் புரிகிறார்களோ எங்கு மொழியும் துந்துபிகள் முழங்குகின்றனவோ அந்த மகீதலம் எங்கள் மாற்றார்களை அன்னியமாக்குக, மா நிலம் என்னை அந்நியர்களிடமிருந்து காக்க.

அப்புவியானவள் நாம் விரும்பும் தனத்தை அளிப்பாளாக (40)

அதர்வண வேதம் பூஸூக்தம்

# ஆசிரியர் பக்கம்

நம் நாடு 75 ஆம் வருட சுதந்திர கொண்டாட்டத்தில் தற்போது இருக்கிறது. கொண்டாடப்பட வேண்டிய விஷயம் தான். பல விஷயங்களில், பல துறைகளில் எப்போதும் இல்லாத அளவிற்கு முன்னேற்றம் வந்துள்ளது. குறிப்பாக கோவிட் வ்யாதியின் கோரப்பிடியில் உலகமே திணறிக் கொண்டிருக்கும் போது நம் நாட்டின் பல்முனை வளர்ச்சி உலக நாடுகளையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

குறிப்பாக கொரோனா தடுப்பூசி நம் மக்களை மட்டுமல்லாமல் ஏழை நாடுகளின் மக்களையும் காப்பாற்றியுள்ளது. நிரம்பப் பாராட்ட வேண்டும். மக்களின் பொருளாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு, எல்லையோர மாநிலங்களின் பாதுகாப்பு இப்படி பல விஷயங்களில் தனி முத்திரையைப் பதித்துள்ளது. முன்பு இருந்த அரசாங்கம் செய்யத் தவறியவைகளை குறுகிய காலத்தில் இந்த அரசாங்கம் செய்துள்ளது. ஏழை மாநிலமாக இருந்த மாநிலங்கள் பல பணம் கொழிக்கும் மாநிலங்களாக மாறியுள்ளன. நிறைய இடங்களில் விண்ணைமுட்டும் கோபுரங்களும், மாட மாளிகைகளும், செல்வ செழிப்பைப் பறை சாற்றுகின்றன. போக்குவரத்து துறையின் வளர்ச்சி அசுர வளர்ச்சியாக உள்ளது . ஆனால் இவைதான் வளர்ச்சியா/ இவை மாயையா? உண்மையான வளர்ச்சி எது ? என்று சிந்திக்க வேண்டும். சுய ராஜ்யத்தின் பொருள் இதுதானா? இதுவே போதுமா என்று சிந்திக்க வேண்டும். இதற்கு மகா பெரியவா விடை கூறுகிறார்.

## எது சுய ராஜ்யம் ?

''தேசி சுய ராஜ்யம் என்று இப்போது எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால் நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் வெள்ளைக்காரன் மாதிரி இருக்க முயல்கிறார்கள். அப்படி பார்த்தால் நாம் பரதேசிகள்தான். வாஸ்தவமான சுய ராஜ்யம் வரவேண்டுமானால் நம் தேச ஆசார அனுஷ்டானங்கள் எப்படி இருந்தன என்று கவனித்து மாற்றினால்தான் சுய ராஜ்யம். நம் தேசத்து பழக்க வழக்கங்கள் ஆத்ம ஸம்பத்தம் பெற்றவை. இதை விட்டு பிற தேசத்தார்கள் மாதிரி நாம் இருக்க ஆசைப்படுவது அடிமைத்தனம் போகவில்லை என்று பொருள்.'

நமது என்று பாசத்தினால் சொல்லவில்லை. காலப்ப்ரவாஹத்தில் பல நாகரிகங்கள் அடித்து கொண்டு போனபோதிலும் நமது நாகரிகம் பாறாங்கல் போல் ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்து இருப்பதே காரணம். நாம் நாமாக இருக்க வேண்டும். வெள்ளைக்காரச் சட்டங்களை அனுசரிப்பது அடிமைத்தனம். அந்த ராஜ்யம் அடிமை ராஜ்யம்தான். நம் நாட்டில் லௌகிக விஷயங்கள் கூட ஆத்ம ஸம்பந்தமுடையவை. அந்த ஆத்ம ஸம்பத்ததை நம் நாட்டின் கலாசார உயர்வை உணர்ந்தவர்கள், தெரிந்தவர்கள் இந்த நாட்டை ஆளத் தகுதி பெற்றவர்கள். அப்பேர்பட்டவர்கள் நாட்டை ஆளும் போது நம் நாடு உலக் குருவாக மாறும். நம்முடைய ஸாஸ்த்ரங்கள் வழிகாட்டும் புஸ்தகங்கள் நம் உயர்வைத் தெரிவிக்கின்றன. அவை இருப்பதால்தான் நான் பேசமுடிகிறது. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சுதந்திரத்தை இவ்விதம் பயன்படுத்தி லோகத்தில் தர்மத்தை நடத்திக் காட்டி மற்ற தேசத்தாருக்கும் வழிகாட்டிப் பரமேஸ்வரனுடைய அனுக்ரஹத்தைப் பெற வேண்டும்.''

உண்மையான சுய ராஜ்யம் பற்றி பெரியவா சொல்வது முற்றிலும் உண்மை. தற்போது நடக்கும் ராஜ்யம் மேனாட்டு சித்தாந்ததில்தான் நடைபெறுகிறது BURACRECY, JUDICIARY , ENFORCEMENT இப்படிப் பல மேனாட்டு சம்பந்தம் உடையவை. இவைகளை நம் பக்கம் மாற்ற வேண்டும் என்று பல அறிவாளிகள் கூறியுள்ளனர். இது பற்றி நாம் ஓரிதழில் கூறியுள்ளோம். நல்ல வேளை, தற்போது பல துறைகளில் பல விஷயங்கள் பெரியவா சொன்னது போல் ஆத்ம சம்பந்தம் பெற்றதாக உள்ளன. நாம் முன்னே சொன்னபடி தற்போது இந்த ராஜ்யம் பெரிய ஸாதனைகளை நிகழ்த்திக் கொண்டுள்ளது. பாராட்டப்பட வேண்டிய விஷயம். அதே ஸமயத்தில் பெரியவா சொல்லும் ''ஸுய ராஜ்ய''த்தை இந்த அரசாங்கம் நிலை நிறுத்தி விஸ்வ குருவாக விளங்கும் என்று நம்புவோமாக.

அதற்கு குருவருளும் கடவுளருளும் துணை நிற்க ஈஸ்வரனைப் ப்ரார்த்திப்போமாக என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் சமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

| VEDA RAKSHANA NIDHI TRUST |
|---|
| **ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431<br>**IFSC Code :** ICIC 0006026<br>**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs |
| **Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005 |
| **Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616 |
| **Indian Bank** Mutt Branch, Kancheepuram<br>A/C No. 411552514 IFSC IDIB b0005085 |

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NOஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.*
*Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.*
*Contact above address.*

# வண்டு ஸ்தோத்ரம்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

# திருமாலுக்கு ஈச்வர சப்தம்



அடுத்த ச்லோகம், ஷட்பதீயில் ஐந்தாவது ச்லோகம் :

**மத்ஸ்யாதிபி - ரவதாரை :**
**அவதாரவதாவதா ஸதா வஸுதாம் ।**
**பரமேச்வர பரிபால்யோ**
**பவதா பவதாப பீதோஹம் ॥**

இங்கேயும் கடைசியில் பவதா என்று இரண்டு தடவை திருப்புகிறார். முதலில் 'பவதா'வைத் தனி வார்த்தையாக எடுத்துக் கொள்ள வேண்டும். 'தங்களால்' என்று அர்த்தம். அடுத்து வருவது 'பவ தாப பீதோஹம் (பீத: அஹம்)' என்று பிரியும். 'ஸம்ஸார தாபத்தினால் பீதி அடைந்துள்ள நான்' என்று இதற்குப் பொருள்.

'பரமேச்வர பரிபால்யே பவதா பவதாப பீதோஹம்' என்பதற்கு ஸம்ஸார தாபத்தினால் பீதி (பயம்) அடைந்துள்ள நான் பரமேச்வரனான தங்களால் பரிபாலிக்கப்பட வேண்டியவனாக இருக்கிறேன்' என்று அர்த்தம்.

பொதுவாக நாம் ஈச்வர சப்தம், பரமேச்வர சப்தம் முதலானவை சிவபெருமானைக் குறிப்பிடுவதாகவே வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆசார்யாளோ எல்லாவற்றிலும் அத்வைதி, அபேத உணர்ச்சியே கொண்டவர். சிவ -விஷ்ணு அபேதமும் இவற்றில் ஒன்று. 'ப்ரச்நோத்தர ரத்ந மாலிகா' என்கிற க்ரந்தத்தில் ஆசார்யாள் கேள்வி - பதில் ரூபத்தில் உபதேசித்துக் கொண்டேபோகிறபோது, 'பகவான் யார்? (கச்ச பகவான்?)' என்று ஒரு கேள்வி கேட்டுவிட்டு, அதற்கு பதிலாக, 'சங்கரனாகவும், நாராயணனாகவும் இருக்கப்பட்ட ஒரே ஆத்மாவான மஹேச்வரன்தான் (மஹேச : சங்கர நாராயணாத்ம

ஏக:)' என்கிறார். துளிக்கூட ஹரி - ஹர பேதம் பாராட்டாதவர் அவர். சங்கரனைப் போலவே நாராயணனும் அவருக்கு மஹேச்வரன்தான், பரமேச்வரன் தான். அதனால், மஹாவிஷ்ணுவையே 'பரமேச்வர!' என்று கூப்பிட்டு, 'நான் உன்னால் ரக்ஷிக்கப்பட வேண்டியவன்' (பரிபால்ய: அஹம்) என்று ப்ரார்த்திக்கிறார்.

இது ச்லோகத்தின் பிந்திய அடி. முந்திய அடியில் 'வதா வதா' என்று என்னவோ திருப்பித் திருப்பிச் சொல்கிறாரே. அதற்கு என்ன அர்த்தம்?

'மத்ஸ்யாதிபிரவதாரை' என்பதை வார்த்தை பிரித்தால் 'மத்ஸ்யாதிபி: அவதாரை:' அப்படியென்றால், 'மத்ஸ்யம் முதலான அவதாரங்களால்' என்று அர்த்தம். லோக ரக்ஷணத்துக்காக பகவான் தசாவதாரம் எடுத்ததைச் சொல்கிறார்.

லோக ரக்ஷணம் என்றால் என்ன? எல்லா தேசங்களுக்குமாக பெரிய கவர்ன்மெண்ட், பெரிய கோர்ட், பெரிய ஸைன்யம், பெரிய போலீஸ் டிபார்ட்மெண்ட் வைத்துக் கொண்டு பண்ணுகிற கார்யமா என்ன? இல்லை. வேதத்தை ரக்ஷித்துக் கொடுத்து, அவரவர்களும் ஸ்வதர்மத்தைப் பண்ணும்படியாக ஆக்கிவிட்டால் அதுதான் லோகரக்ஷணம். வேதரக்ஷணம் தான் லோகரக்ஷணம். வேத மந்த்ர சப்தங்கள் அட்மாஸ்ஃபியரில் குறையாமல் பரவிக்கொண்டு, வைதிக யஜ்ஞங்களால் ஸகல தேவதா ப்ரீதி ஏற்பட்டு விட்டால், தன்னால் லோகம் முழுவதும் ரக்ஷிக்கப்பட்டதாக ஆகிவிடும். அதனால் எப்போதெல்லாம் வேத தர்மத்துக்கு ஹீனம் உண்டாகி, லோகம் க்ஷீணமாயிற்றோ அப்போதெல்லாம் பாலன கர்த்தாவான மஹா விஷ்ணு அவதாரம் பண்ணி வேதத்தை புநருத்தாரணம் செய்வார். இதனால் லோகம் க்ஷேமம் அடைந்துவிடும்.

ஸோமுகாஸுரன், ஹயக்ரீவன் போன்ற அஸுரர்கள் வேதத்தையெல்லாம் ஜலக் காட்டிலே ஒளித்து வைத்த போது பகவான் மீனாகத் தோன்றி அதை மீட்டு வந்தது தான் மத்ஸ்யாவதாரம். 'ப்ரளய பயோதி ஜலே' என்று ஜயதேவர் அஷ்டபதியில் இதைச் சொல்லியிருக்கிறது.

இது மாதிரியான பத்து அவதாரங்களில் பகவான் தம்முடைய உயர்ந்த ஸ்தானத்தை விட்டு இந்த பூலோகத்துக்கு இறங்கி வருகிறார். பரமபதம் என்று சொல்கிற உத்தமமான வைகுண்டத்திலிருந்து இறங்கி நம் லோகத்துக்கு வருகிறார். 'அவதாரம்' என்றாலே 'இறங்கி வருவது' என்பதுதான் அர்த்தம். 'தார' என்றால் உச்சி. தார ஸ்தாயி என்று மேல் ஸஞ்சாரத்தைச் சொல்கிறோம் அல்லவா? 'அவ - தாரம்' என்றால் reverse order-ல் அந்த உச்சியிலிருந்து கீழே வருவது. பரம கருணையால் பகவான் இப்படி இறங்கி வருகிறான்.

கீழே இருக்கிற நம்மைக் கையைப் பிடித்து மேலே அழைத்துக் கொண்டு போகவேண்டும் என்பதற்காக, உச்சத்துக்கெல்லாம் உச்சத்திலுள்ள பகவான் நம் லெவலுக்கு இறங்கி வருகிறான்.

‘அவதாரவதா’ என்று ச்லோகத்தில் வருவதற்கு இறங்கி வந்தவனாக ஆனதால் என்று அர்த்தம்.

‘மத்ஸ்யாபி: அவதாரை:’ . மத்ஸ்யம் முதலான அவதாரங்களால்: ‘‘அவதாரவதா’’ – கீழே இறங்கி வந்தவனாக ஆனதால்.

அவதாரவ தா + அவதா என்பதே ‘அவதாரவதாவதா’ என்று அடுத்தடுத்து மூன்று ‘வதா’வைக் கொடுக்கிறது. பின்னே சொன்ன ‘அவதா’ என்பதில் ‘அவ’ என்பது ரக்ஷிப்பதைக் குறிக்கும். ‘மாமவ’, ‘மாமவ’ என்று அநேக கீர்த்தனைகளில் வருவது ‘மாம் + அவ’ என்பதே. ‘மாம் – என்னை; அவ – காப்பாற்று’ என்பது அர்த்தம்.

‘அவதா ஸதா வஸுதாம்’ என்று இங்கே ச்லோகத்தில் இருப்பது, எப்பொழுதும் (ஸதா) லோகத்தை (வஸுதாம்) பகவான் அவதாரங்களால் அவனம் (ரக்ஷணை) செய்து கொண்டிருப்பதைச் சொல்கிறது.

வஸு என்றால் பல தினுஸான செல்வங்களையும் குறிக்கும். இயற்கை என்கிற எல்லாச் செல்வங்களையும் (natural resources) பூமி கொடுப்பதால் பூமிக்கு ‘வஸுதா’ என்று பேர். ‘வஸுந்தரா’ என்றும் சொல்வதுண்டு. இப்படிச் செல்வம் நிரம்பின பூமியானது ஜனங்களின் பாபத்தினால் வற்றி வாடிப் போகிற போதெல்லாம் அதை ரக்ஷித்துப் பழையபடி ஆக்குவதற்காக ஸ்வாமி அவதரிப்பதை ஆசார்யாள் சொல்கிறார். ஜனங்கள் பண்ணும் ஸகல பாபத்தையும் தாங்கிக் கொள்கிற பூமாதேவி ஒரு ஸ்டேஜுக்கு தாங்க முடியாமல் பகவானிடம் போய் முறையிடுவாள். உடனே அவர் அவதாரம் பண்ணிவிடுவார். பூமாதேவி பசு ரூபத்தில் போய் முறையிட்டவுடன் பகவான் க்ருஷ்ணனாக அவதாரம் பண்ணிப் பசு மந்தைகளை மேய்த்ததாக பாகவதத்தில் இருக்கிறது.

‘இப்படி லோகத்தை மத்ஸ்யம் முதலான அவதாரங்களால் எப்போதும் ரக்ஷிக்கிற பரமேச்வரா!’ ஸம்ஸார தாபத்தினால் பயந்து கிடக்கிற நானும் உன்னால் ரக்ஷிக்கப்பட வேண்டியவன்’ என்பது இந்த ச்லோகத்தின் அர்த்தம்.

லோகரக்ஷணத்துக்காக பரம கருணையோடு திரும்பத் திரும்ப பகவான் அவதரிப்பதை வாக்கின் போக்கிலேயே காட்டி விடுகிறமாதிரி 'அவதாரவதாவதா... பவதா பவதாப ' என்று ஒரே சப்தங்களைத் திரும்பத் திரும்ப அடுக்கி வைத்திருக்கிறார்!

' திருப்பித் திருப்பி அவதாரம் பண்ணுகிற விஷ்ணுவுக்குத் தான் கர்ப்பவாஸம் உண்டு. எங்கள் ஈச்வரனுக்குக் கிடையாது' என்று சைவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொள்வதும், 'தான் கீழே இறங்கி வந்தாகிலும் ஜனங்களை உயர்த்த வேண்டும் என்று அவதாரம் பண்ணும் பரம காருண்யம் எங்கள் பெருமாளுக்குத்தான் உண்டு; ஈச்வரனுக்கு இல்லை' என்று வைஷ்ணவர்கள் பெருமைப்பட்டுக் கொள்வதுமாக இருக்க, நம் ஆசார்யாளோ பெருமாளையே, பரமேச்வரா!' என்று கூப்பிட்டு அவதாரங்களையும் சொல்லி ஸமரஸப்படுத்தியிருக்கிறார்.

'புருஷர்களுக்குள் உயர்ந்த புருஷோத்தமனே ஹரி; மஹேச்வரன் என்பதாக ஈச்வர பட்டம் உடையவன் த்ரயபம்பகனான (முக்கண்ணனான) ஒருவனே அன்றி வேறில்லை' என்று காளிதாஸன் சொல்லியிருக்கிறான் : ஹரிர் யதைக: புருஷோத்தம ஸ்ம்ருத : மஹேச்வரஸ்-த்ரயம்பக ஏவ நாபர :

'அமரம்' என்கிற ஸம்ஸ்க்ருத டிக்ஷனரியிலும் ஈச்வர் ! சர்வ ஈசாந : என்பதாக 'ஈச்வர' என்கிற டைட்டிலை சர்வனும் ஈசானனுமான சிவனுக்கே கொடுத்திருக்கிறது.

ஆனால் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் இடையில் கொஞ்சம் கூட வித்யாஸம் பாராட்டாத நம் ஆசார்யாள் இங்கே 'பரமேச்வர' என்று மஹாவிஷ்ணுவையே கூப்பிடுகிறார். 'என்னை ரக்ஷியப்பா' என்று அவனை வேண்டிக் கொள்கிறார்.

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்


## பக்திச் சமுதாயம்

பக்தியுடன் கூடிய சமுதாயமே மனிதனை மேம்படுத்தும். சமுதாயமும், பக்தியும் ஒன்று சேர்ந்து செயல்பட்டால்தான் சரியான பலன் கிட்டும். அதைத் தெரிவிப்பதுதான் இராமாயணம். பக்தியோடு எப்படி சமுதாயத்தில் வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதே இராமாயணம் ஆகும்.

மாற்றாந்தாய்ப் பிள்ளைகளாக. இருந்தாலும் எப்படி ராமரும் லக்ஷ்மணரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள்? அதுபோல் நாம் எல்லாம் வெவ்வேறு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக இருந்தாலும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் அன்போடும் பாசத்தோடும் இருக்கவேண்டும். ராமர் லக்ஷ்மணரின் பாசம் அதைத்தான் நமக்குக் காட்டுகிறது.

அதைப்போல பரதன், சத்ருக்னனுடைய பாசமும் நாம் எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

நாம் எல்லோரும் சகோதரர்களே, சகோதரிகளே என்பதை வெறும் வாய்ச் சொல்லோடு நிறுத்திக் கொள்ளாமல் உண்மையிலேயே அப்படி



எல்லோரையுமே சகோதர சகோதரிகளாகக் கருதி அன்பு காட்ட வேண்டும். அதை எடுத்துக் காட்டுவதே இராமாயணம் ஆகும்.

சொந்தத் தாய்மார்களின் பிள்ளைகளாக இருந்தாலும் நாம் எல்லாம் இறைவனுடைய பிள்ளைகள் என்ற உணர்வோடு ஒற்றுமையாக வாழ வேண்டும். விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். அன்போடும், பண்போடும் வாழ வேண்டும்.

சில வீடுகளிலே இன்றைக்கும் கூட வாலி, சுக்ரீவருடைய சகோதரத்துவம் இருக்கிறது.

வாலியும்,சுக்ரீவனும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள்தான். ஆனால் அவர்கள் இருவரும் எப்போதும் சண்டை போட்டுக் கொண்டே இருந்தார்கள். இறைவனையும் அதற்குத் துணையாகக் கொண்டார்கள்.

வாலி சுக்ரீவன் போல யாரும் இருக்கக்கூடாது என்று கூறினேன், அவர்கள் பக்தி என்ற பெயரால், பகைகளைப் பண்ணிக்கொண்டு சண்டைகளும் போட்டுக் கொண்டார்கள். எப்படி வாழக்கூடாது என்பதற்கு வாலி, சுக்ரீவனுடைய வரலாறு. எப்படி வாழ வேண்டும் என்பதற்கு இராம லக்ஷமணருடைய வரலாறு. வாழ்க்கையிலே யாருமே பகவான் பெயரிலே தப்பு செய்யக் கூடாது என்பதற்குத்தான் இந்த வரலாறுகள்.

மூன்றாவதாக இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் இந்த மூன்று பேரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். பிறந்த நேரம் சரியில்லை என்ற காரணத்தினால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி இருந்தார்கள். இந்த மூன்று பேருமே நல்ல பக்திமான்கள்தான் இராவணன்போல பக்திமானைப் பார்க்க முடியாது. இராவணன் சிவ பூஜை செய்தவன், சாமவேதம் சொல்லி இறைவனை அர்ச்சித்தவன்.

# சிவலிங்கப் பிரதிஷ்டை

இராவணன் படைப்புத் தொழிலைக் கொண்ட உயர்ந்த பிரம்மதேவன் குலத்திலே வந்த ஒரு பிராமணன். அவன் உயர்ந்த குலப் பிராமணன் என்பதால் பலப்பல வேள்விகள் எல்லாம் செய்து, யக்ஞங்கள் எல்லாம் செய்து தேவதைகளின் அனுக்கிரகங்களை எல்லாம் பெற்றவன். அந்த அனுக்கிரகங்களினாலே எவ்வளவோ வரங்களை எல்லாம் பெற்றவன். அந்த வரங்களினாலே அகங்காரம் அடைந்து, அவனுடைய நல்ல குணத்துக்கு ஒவ்வாத, மனித குலத்துக்குப் பொருந்தாத பல துஷ்ட குணங்களை, தீய குணங்களை எல்லாம் பெற்று கெட்ட மனிதனாகி விடுகிறான். அது ஒரு சூழ்நிலையினாலே தான்.

உண்மையிலேயே அவன் ஒரு நல்ல பிராமணன். சாமவேதி, கயிலாயம் சென்றவன், சிவபூஜை செய்தவன். அப்படிப்பட்டவன், கர்னாடகத்திலே சிவனுக்கு பூஜை செய்தான். இன்றைக்கும் அங்கு இராவணன் பிரதிஷ்டை செய்த சிவலிங்கம் இருக்கிறது. அப்படிப்பட்ட நல்லவனாயிருந்தும் கூட வாழ்க்கையில் நெறி தவறி, கெட்டவனாகச் சித்தரிக்கப்பட்டு அவனைக் கொல்ல வேண்டிய ஒரு நிலை வந்தது.

கும்பகர்ணன் அவனுடைய தம்பி. அவன் ஆரம்பகாலம் முதலே குடிப்பான், நன்றாகச் சாப்பிடுவான், நன்றாகத் தூங்குவான். இதை மட்டுமே அவன் செய்து கொண்டு இருந்தான். இன்றைக்கும் பல குடும்பங்களிலே கும்பகர்ணனுடைய சுபாவம் பலருக்கு இருக்கிறது. இராவணனுடைய சுபாவம் கூடக் குறைவுதான். ஆனால் சாப்பிடுவதும், குடிப்பதும், தூங்குவதுமாக ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். இந்த நிலை என்றைக்குமே உதவாது.

இராவணனுடைய நிலையாவது கொஞ்சம் பரவாயில்லை. என்றைக்காவது ஒருநாள் திருந்துவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆனால் கும்ப கர்ணனுடைய நிலையோ திருந்தவே திருந்தாதது.

விபீஷணனைப் பற்றிப் பலபேர் தவறாகச் சொல்கிறார்கள். அவன் காட்டிக் கொடுப்பதற்காக ராமனிடம் வந்தவன் என்று.

ஆனால் அவன் நல்லவன். அவன் காட்டிக் கொடுப்பதற்காக ஒரு போதும் வரவில்லை. தானும் வாழ்ந்து, தன்னுடைய நண்பர்களும் சகோதரர்களும் நல்ல நிலையை அடைய வேண்டும், என்று வந்தவன்தான் அவன்.

விபீஷணனை யாரும் கொல்ல முடியாது. அழிக்க முடியாது. எப்போதுமே தவத்திலேயே இருந்தவன். அவனை யாராலும் அழிக்க முடியாது. இன்றைக்கும் ஜீவித்துக் கொண்டிருப்பவன். உயிரோடு உள்ளவன்.

இராவணன் போய்விட்டான், கும்பகர்ணனும் போய்விட்டான். இராமர் உடல் அளவில் போய் விட்டார். ஆனால் சுவாமியாக இருக்கிறார்.

அதுபோல விபீஷணரும் இன்றைக்கும் இருந்து கொண்டு இருக்கிறார். மொத்தம் ஏழு பேர் சிரஞ்சீவிகளாக இருக்கிறார்கள்.

ராமன், அஸ்வத்தாமன், வினுசக்கரவர்த்தி, விபீஷணன், அனுமான், கிருபாச்சாரியார், பரசுராமன்... இந்த ஏழு பேர்களையும் கொல்ல முடியாது.

இராமர்கூட பரசுராமரோடு போர் செய்து அவரது சக்தியைக் குறைத்தாரே ஒழிய அழிக்கவில்லை. ஆக, அழித்து விடுவாரோ என்று பயந்து கொண்டு இராவணனிடமிருந்து வரவேண்டிய அவசியமே விபீஷணனுக்கு இல்லை.

பிறகு எதற்கு வந்தான் ?

நல்ல மனிதனிடம் எங்கே நியாயம் இருக்கிறதோ, எங்கே தர்மம் இருக்கிறதோ அங்கேதான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதற்காக வந்தான்.

அநியாயம் நடக்கும் இடத்திலே இருந்தால் அந்தப் பாவம் நமக்கும் வந்துவிடும் என்பதற்காக அநியாயத்திற்காக இடம் தராமல் வந்தவன்.

அண்ணனாக இருந்தாலும், அவன் பலம் உள்ளவனாக இருந்தாலும், தகுதி உள்ளவன் என்பதற்காகத் தான் விபீஷணன் இராமனிடம் வந்தானேயொழிய ராஜ்யத்திற்கு ஆசைப்பட்டு ஒருபோதும் வரவே இல்லை.

அவன் நல்ல சிந்தனை உள்ளவன். அவனுக்கு அப்படிப்பட்ட ஆசைகள் எல்லாம் கிடையாது. அவன் இறைபக்தி உள்ளவன். எங்கே நல்ல விஷயம் இருக்கிறதோ அங்கே போய் இருக்க வேண்டும் என்று வந்தவன்.

அதனால் ராமருடைய நல்ல குணங்களைப் பார்த்துச் சரணாகதி ஆனான்.

அதனால்தான், குகனோடு ஐவரானோம், சுக்ரீவனோடு அறுபரானோம், உன்னோடு எழுவரானோம் என்று சொல்கிறார் ராமர்.

ராமர் லக்ஷ்மணர் நால்வர். குகனோடு ஐவரானோம், சுக்ரீவனோடு அறுவரானோம், இங்கே விபிஷணனோடு எழுவர் ஆனோம் என்று எல்லாம் தனது சகோதரனுக்குச் சமமாகச் சொல்கிறார்.

காரியமாவதற்காக சுக்ரீவனோடு சினேகத்தை முடித்துக் கொண்டு அறுவரானோம் என்று சொல்லி விட்டார். ஆனால் நிஜமாகவே குகன் ஒரு நல்ல பக்தன். ஒரு நல்ல மனிதன். ஒரு நல்ல சேவகன்.

விபீஷணன் நியாயமாகத் தன்னை அண்டி, தீயதிலிருந்து விலக வேண்டும், தவறான அண்ணன் தம்பிகள் இருக்கக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் வந்தான். அவன் குறை சொல்வதற்காக வரவில்லை.

ஆகவே, விபீஷணன் போல் நல்ல பக்தனாகவும், நல்லவர்களோடு சேர்ந்த வாழ்க்கையை நாமும் வாழ வேண்டும்.

இப்படி, சகோதரர்களிலே பலவகை.

தர்மபுத்திரர் ஐவர்கள். துரியோதனர் 101 சகோதரர்கள். ஒருத்தி பெண். துர்முகி. அவளோட புருஷன்தான் ஜயத்ரதன். அவர்களுக்குச் சிறுவயது முதலே தாயாதிகள் சண்டை தொடங்கி, பூமி ஆசை வந்து, அகங்காரம் வந்து ராஜ்யத்தை ஆள வேண்டும் என்ற ஆசை வந்து அதனால் யுத்தம் வந்து எல்லோருமே இறந்து போய் விடுகிறார்கள்.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### கோடட், தெலுங்கானா 28.06.2022

**''ஸ்ருதி ஸ்மிருதி புராணானாம் ஆலயம் கருணாலயம் நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம்''**

காஞ்சிபுரத்தில் இருந்து புறப்பட்டு, கடப்பா, தாடிபத்ரி, அனந்தபூர், பெல்லாரி, சாந்தூர், ஹம்பி, ஹோஸ்பெட், ராய்ச்சூர், மெஹபூப் நகர், பாக்ய நகரம், துண்டிகல் ஆகிய ஊர்களுக்குச் சென்று தற்போது கோடாட் வந்துள்ளோம். அங்கங்கு ஒவ்வொரு கார்யக்ரமம் பார்த்துக் கொண்டு வருகிறோம்.



ப்ரதி வருஷம் சாதுர்மாஸ்ய வ்ரதம் மேற்கொள்வது வழக்கம். அந்த வகையில் இந்த வருட சாதுர்மாஸ்யத்திற்காக காக்கிநாடா செல்கின்றோம். சாதுர்மாஸ்ய பூஜை சமயம், இரண்டு மாதம் ஒரே இடத்தில் இருப்போம். அச்சமயம், பஞ்சாங்க சதஸ், அத்வைத சதஸ், அக்னிஹோத்ர சதஸ் மற்றும் வேதபாஷ்ய சதஸ் ஆகியவை நடைபெற உள்ளன. வியாபாரிகளாகிய நீங்கள் எப்படி பட்ஜெட் என்று கூறுகிறீர்களோ, அதுபோல் வரும் வருஷத்திற்கு எப்படி பஞ்சாங்கம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற சதஸ் இரண்டு மூன்று நாட்கள் இருக்கும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பஞ்சாங்க கர்த்தர்கள் வருவார்கள். திரிக் சித்தாந்தம், வாக்கிய சித்தாந்தம் அனைவரும் வந்து அமர்ந்து கொண்டு, ஒவ்வொரு நாளாக படிப்பார்கள். சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரை படிப்பார்கள். இப்பொழுது ஜனவரி, பிப்ரவரி பிரபலமாக உள்ளது.

குழந்தைகள் மத்தியில் கூட சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி இந்த மாதங்கள் பிரபலமடைய வேண்டும். பூஜைகளுக்கு திதி, புண்ய ஸ்மரணம் அனைத்திற்கும் கால நிர்ணயம் பார்த்து சொல்கிறார்கள். சில பூஜைகளில் உதயம் கூட அந்த கால நிர்ணயத்தில் உள்ளதா? பஞ்சமி, சஷ்டி உள்ளதா? உதயம் (ஔதைக வ்யாப்தி) என்றால் அந்த நாளில் ஸ்தானம், பூஜை நிர்ணயம் செய்கிறார்கள். ஆப்திகம் என்பது சில விஷயங்களில் - பிதுருக்கள் பூஜைக்கு பார்க்கிறார்கள். குதப காலம் என்றால் மாத்யாநிகம் அந்த நேரத்தில் ஏதாவது திதி உள்ளதா? என்று பார்ப்பது. சில விஷயங்கள், சந்த்யா சமயம்- த்ரியோதசி என்று எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே பிரதோஷம் என்கிறார்கள். அது அந்த சந்த்யா சமயத்தில் உள்ளதா? த்ரயோதசி இரண்டு நாளில் இருந்தால், எந்த நாளில் பிரதோஷ பூஜை? எந்த நேரத்தில் இருந்து துவங்குகிறது. அதெல்லாம் பார்க்கிறார்கள். சிவராத்திரிக்கு திரயோதசி சம்பந்தம் எவ்வாறு உள்ளது? அமாவாசை சம்பந்தம் எல்லாம் பார்க்கிறார்கள்.

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீபம். அருணாசல க்ஷேத்ரத்தில் ஒரு விதமாக உள்ளது. வீடு வீடாக செய்யும் கார்த்திகை தீப பூஜை, வேறு விதமாக உள்ளது. சர்வாலய தீபம், அருணாச்சல தீபம் என்று உள்ளது. அருணாச்சலக் கோவிலில் நட்சத்திரம் பிரதானம். பரணி நக்ஷத்திரத்தில் ஆலய தீபம் ஏற்றுகிறார்கள். கிருத்திகா நக்ஷத்திரம் சமயம் மலை மீது தீபம் ஏற்றுகிறார்கள். சில சமயங்களில் கிருத்திகா நக்ஷத்திரம், பூர்ணிமா சேர்ந்து வரும். சில சமயங்களில், அருணாச்சல தீபம், சர்வாலய தீபம் ஒன்றாக வருகிறது. பூர்ணிமா வெவ்வேறு நாளில் வந்தால், அருணாச்சல தீபம் இன்று, சர்வாலய தீபம் என்று என தீர்மானம் செய்கிறார்கள். ஒவ்வொரு கோவிலுக்கும் சம்பந்தப்பட்ட விஷயங்கள். சிவராத்திரி என்றால், வீட்டில் செய்யும் பூஜை ஒருநாள். சைவ ஆகமம் படி பிரதிஷ்டை செய்த சிவ ஆலயத்தில் கூட இதையெல்லாம் பற்றி உரையாடி, தர்ம சாஸ்திரம் படித்தவர்கள் அதற்கு வருகிறார்கள். பொது சட்டம் படித்தவர்கள் எப்படி சட்டம் சம்பந்தமாக பேசுகிறார்களோ, அதே போல, இந்து தர்ம சாஸ்திரம் படித்தவர்கள் இந்த சதஸ்க்கு வருகிறார்கள்.

அர்த்தோதய புண்ணிய காலம். மகோதயம் என்பது ஒரு புண்ணிய காலம். அக்காலத்தில் சமுத்திரம் சென்று ஸ்நானம் செய்தல் விசேஷம். அந்த நாள் தானம் செய்தல் விசேஷம். நாம் நினைத்த நல்ல தானம் செய்தால், நல்ல புண்ணியம் கிடைக்கும். அமாவாசை, திங்கட்கிழமை என்று சில சேர்ந்து வர வேண்டும். அப்படி சேர்ந்து வந்தால் அர்த்தோதய புண்ணிய காலம், யோகம், கரணம், திதி, வாரம் போன்றவை சேர்ந்து

வர வேண்டும். ஏதாவது ஒன்று குறைந்தால், அது மகோதயம். அப்பொழுது சமுத்திர ஸ்நானம் செய்ய வேண்டும்.

தஞ்சாவூர் அருகில் வேதாரண்யம் என்ற ஊர் உள்ளது. இம்மாதிரி பூஜைகள் வந்த சமயம், ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அங்கு சமுத்திர ஸ்நானம் செய்து, கோ தானம் செய்தார்கள். முடிந்த அளவு பஞ்சாங்கங்களில் உள்ள வித்தியாசங்களை இந்த சதஸ் மூலம் குறைக்கப்படுகின்றன.

அடுத்ததாக அக்னிஹோத்ரிகள், இந்த நாட்டில் யாகங்கள், ஹோமங்கள் செய்து வருகிறார்கள். அதன் மூலம் அவர்களுக்கு புண்ணியம் வருகின்றது. மக்களுக்கும் புண்ணியம் கிடைக்கின்றது. அந்த காலத்தில் வாஜபேய யாகம் செய்தால், அரசர்களால் சன்மானம் தரப்பட்டது. இந்த வருஷம் கூட, காஞ்சி மடத்தின் சார்பில் ஸ்ரீரங்கம் அருகில் ஒரு யாகம் நடைபெற்றது. பின் அவர்களுக்கு மரியாதை செய்யப்பட்டது.

இந்த பாரத தேசத்தில், அக்னி ஹோத்திரிகள் 150 முதல் 200 பேர்கள் மட்டுமே உள்ளார்கள். இந்த பெரிய தேசத்தில் 200 பேர்கள் மட்டுமே உள்ளார்கள். அவர்களை ஆந்திர மாநிலம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடக, ராஜஸ்தான், உத்திரப்ரதேசம் போன்ற மாநிலத்தில் இருந்து அவர்களை வரவைத்து கௌரவம் செய்யப்பட்டது. ஆந்திர மாநிலத்தில் பல அக்னி ஹோத்திரிகள் உள்ளார்கள் என்பது ஒரு கௌரவம். அவர்களுக்கு கூட சன்மானக் காரியங்கள் உள்ளன.

வேத சதஸ் - அத்வைத சபா -பிரஸ்தான த்ரையம் என்பார்கள். பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, ஈஸ, கேன, ப்ரஷ்ன, முண்டக, மாண்டுக்ய என்ற உபநிஷத்களின் பாஷ்யங்களை விவரிப்பார்கள். ஆதி சங்கர பகவத்பாதாள் ''ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ஹ தாபநீய உபநிஷத்''க்கு பாஷ்யம் எழுதியுள்ளார்.

வேதாந்தம் என்று எதெல்லாம் உள்ளதோ, பிரம்ம ஸத்யம், ஜகன் மித்யா '' என்பதை திடமாக நம்பிக்கொண்டு, அதே உண்மை என்று உணர்ந்து, அம்மாதிரி தியாக ஜீவிதர்கள் எவர்கள் உள்ளார்களோ, நிர்மலமான மனதுடன் கலந்து, இறைவன் சேவை செய்கிறார்களோ, உலகத்திற்காக சேவை செய்கிறார்களோ, அவர்களை கௌரவம் செய்வதாக மந்திரங்கள் உள்ளன.

நமது தேசத்தின் கலாசாரம், தர்மம் ஆகியவற்றை பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அது தெரிந்து கொள்ள சாதுர் மாஸ்ய சமயத்தில், அநேக சதஸ்ஸுகள் நடத்தப்படுகின்றன.


அந்த முறையில் சாதுர் மாச பூஜை நடைபெறப் போகிறது. ஆஷாட மாதம் சுக்ல பௌர்ணமி அன்று வியாச பூஜா, அநேக மகரிஷிகளுக்கு பூஜைகள் நடைபெற உள்ளன. நமது தேசத்தில் குரு பக்தி என்பது முக்கியம். மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, அதற்கு பின் ஆச்சார்ய தேவோ பவ. எந்தெந்த குரு உள்ளார்களோ, அவர்களையெல்லாம் வணங்குதல் சாதுர் மாஸ்யம் ஆகும். நீங்கள் அனைவரும் இருக்கும் இடத்தில் எந்தெந்த குருக்கள் உள்ளார்களோ, அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். ஸ்தோத்திரம் எல்லாம் படிக்க வேண்டும்.

நீங்கள் அனைவரும் இந்த நல்ல காரியங்களில் ஈடுபட்டு, தர்மோ ரக்ஷதி ரக்ஷிதஹா என்பதற்கு ஏற்ப, நாம் தருமத்தை பரிபாலனம் செய்து, அந்த தர்மம் மூலம் அனைவருக்கும் நல்லது பெருக வேண்டும் என்று பிரார்த்தனை, பிரயர்த்தனம் செய்து, காஞ்சி காமாக்ஷி அம்பாளின் ஆசியும் அனுக்ரகமும் அனைவருக்கும் பெற பிரார்த்தனை செய்கிறோம்.

ஹர ஹர நமப் பார்வதி பதயே, ஹர ஹர மகா தேவா.


ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 6

ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்

பி. ஆர். கண்ணன்

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன்

**ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து**

என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

**விகாரமந்த்ரேண ஸ்வாத்யஸ்தம் ஸர்வம் ஸாக்ஷாதவ்யவதானேன ஸ்வரூப போதேன ஈக்ஷதே பஸ்யதீதி ஸாக்ஷ்யனுபவஸித்தீ; ஸம்யக் பூயாத் ॥ 33**

*என்னுடைய ஸ்வரூபமே நிஜம். அதிலேயே எல்லா பார்க்கப்படும் பொருள்களும் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன. இந்த உண்மைஅனுபவம் சித்தமாகட்டும்.*

**தேஹேந்த்ரியாதி ஸகல ஜடாஅவபாஸகத்வேன ஆத்மா சித்ரூப இதி சிதாத்மா அனுபவ ஸித்த் ஸம்யக் பூயாத் ॥ 34**

*உடல் மனம் மற்றும் எல்லா ஜடப் பொருள்களிலும் சித் ரூபமான ஆத்மாவே ப்ரகாசிக்கிறது என்னும் அனுபவ சித்தி ஏற்படட்டும்.*

**ஆத்மனி கதாசிதபி அபிப்ராயபாவேன,பரமப்ரேமாஸ்பதத்வேன ச,ஆத்மா பரமானந்த ரூப இதி ஆனந்தாத்ம அனுபவ ஸித்தி: ஸம்யக் பூயாத் ॥ 35**

*ஆத்மா ஆனந்த ஸ்வரூபம், ப்ரேமஸ்வரூபம். ஆத்ம ப்ரேமை எப்போதும் அறாது. அந்த பரம ப்ரேமானந்தம் எனக்கு நன்றாக ஏற்படட்டும்.*

**அபாரூபஸ்ய விஸ்வஸ்ய பானம் பாஸக நிதிம் வினா கதாசிதபி ந ஸமப்வதீதி பாரூபாத்மா ஸர்வகத இதி ஸர்வகதாத்மானுபவ ஸித்தி: சம்யக் பூயாத் ॥ 36**

*ஆத்மா ஒளிஸ்வரூபம் விஸ்வம் இருட்டு. இதை ஒளியான ஆத்மா ஒளிரச் செய்கிறது. ஸர்வகதமாயிருக்கும் இந்த ஒளியான ஆத்மானுபவம் எனக்கு ஸித்திக்கட்டும்.*

**அஸஜ்ஜடதுக்காத்ம அஹங்காராதிப்யோ விலக்ஷணதயா ப்ராதிகூல்யேன ஸத்யக்யானானந்தரூபேண அஞ்சதி ப்ரகாஸத இதி ப்ரத்ய்காத்ம அனுபவ ஸித்தி; ஸம்யக் பூயாத்நச ।37**

*அசத்தாகவும் துக்கமுடையதாகவும் இருக்கும் அஹங்காரங்கள் முதலியவற்றிலிருந்து வேறுபட்டும் ஸத் சித் ஆனந்த ரூபமாயிருக்கும் ப்ரத்யகாத்மா அனுபவ ஸித்தி நன்றாக ஏற்படட்டும்.*

பச்சாத்பாஸமானஸ்ய ஜடஸ்ய ப்ரதமதோ பாஸமானம் சைதன்யமேவ
வாஸ்தவம் ஸவரூபமிதி நிச்சித்ய ஜடமுபேக்ஷ்ய சின்மாத்ரமேவ சித்தம்
நிரந்தரம் ஸம்யக்பூயாத் ॥ 38

*ஆத்மா சைதன்யமாய் ஒளிருகிறது. ஜடமான விஸ்வத்தை இந்த சைதன்யமே ஒளிரச் செய்கிறது. என் மனம் இந்த சைத்ன்ய ரூபமான விழிப்பு நிலையில் நிரந்தரம் இருக்கட்டும்.*


# ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.




ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# AVATHAR ANTICIPATED

A Prayer

Spirit of God that rulest, lord and king
Of all this universe, who from Thy throne
In heaven, besieged by prayers, lookst down on man,
Immeasurable Spirit, if any thought
Of human frailty in my mind should dwell,
While at Thy feet I lay myself, forgive.
Not for myself but for the land were Thou
Wert once a mighty warrior, lord and king,
For India, for her sons, I pray, who now
Fallen, abject, cringing to a foreign hand,
Forget Thee. Thou immeasurable Lord
Of all this universe, august, unborn,
By Thy unspeakable compassion urged
Enteredst a human body, of Thy huge
Empire a little province camest down
From foes within and foes without to save.
Again the land is full of Thee and full
Of hope; a stir is in the air, a cry
Is in men's hearts, the whole terrestrial globe
Thrills and vague rumours, huge presentiments
Move like the visions born of mist and dream
Across the places where Thou once wast born
Prophesying Thy advent. Wilt Thou come
Lord, in a form such as Thou worest once
When Mathura was free, when Kamsa fell,
And from Brindavan came the avenging sword
Till then concealed. So would we have Thee come.



The nations of the earth are full of sin;
Greed, lust, ambition are their Gods and keep
Revel with Science for their caterer
To give the food by which they live. All forms
Of mercy, gentleness and love are lost
While strength alone is worshipped, strength divorced
From justice, uninspired by noble aims.
The greatness of earth forget their source
And limit; they desire to break and build,
To fill their lust, to hold majestic rule
For ever, but forget the source of strength,
Forget the purpose for which strength is given.
Oppression fills the spaces of the world,
Hatred and pain reply with murder, One
Is needed who will break the strengths of earth.
By His diviner strength; and till He comes.
In vain we struggle and in vain aspire.
Come therefore, for Thou saidst that Thou wouldst come;
Whenever strong injustice lifts her head
To slay the good, Thou saidst that Thou wouldst come
For rescue of the world. Today the globe
Waits for Thy coming, as it waited then
When Ravan was the master of the world
And Lanka, full of splendid strength and sin,
Possessed mankind. Now many Ravans rule
And many Lankas. Therefore come; the earth
Can bear no more the burden of their pride,
Hellward she sinks. Unless Thou come, the end
Approaches. Save Thy fair creation, Lord.

Vande Mataram, pp. 810-2

Sri. ARAVINDAR

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -24

பி. ஆர். கண்ணன்



ஸுவாஸினிபூஜை, கன்யாபூஜை, வடுபூஜை. தானம். குரு சிஷ்யனுடன் போஜனம், அங்கேயே அன்று இரவு தூங்கி, சிஷ்யன் தினமும் மந்த்ர உபாஸனை செய்ய வேண்டும். தீக்ஷாவிதி என்பது இவ்வாறு இருக்கையில், குறுக்குவழியில் மந்த்ரோபதேசம் பெற முயற்சிப்பது எந்த பலனையும் அளிக்காது.

நாராயணரிஷி- நாரத ஸம்வாதம் 8வது ஸ்கந்தம், மனுக்கள் சரித்ரத்தில் ஆரம்பித்தது இதுவரை தொடர்ந்து நீடித்தது. இங்கு முற்றுப்பெறுகிறது.

**கேனோபனிஷத் கதை**

தேவர்களுக்கும், தானவர்களுக்கும் ஒருசமயம் 100 வருஷங்கள் கடும் யுத்தம் நடந்தது. பகவதியின் க்ருபையினால் தேவர்கள் ஜயித்தனர். ஆனால் கர்வமும், மதிமயக்கமும் அடைந்தனர். ஞானிகளுடைய மனமே நிலையில்லாமல் பராசக்தியின் மாயைக்கு வசப்படும்போது, தேவர்கள் மதிமயங்கியதில் ஆச்சர்யமில்லை. இவர்களுக்கு பாடம் புகட்டுவதற்காக, அம்பாள் கோடிசூர்யப்ரகாசமும், கோடிசந்த்ரக் குளிர்ச்சியும், கோடிமின்னல் காந்தியும் கொண்ட, ஆகாயத்திற்கும் பூமிக்கும் நீண்ட யக்ஷஸ் ரூபம் எடுத்து இந்த்ரஸபையின் வெளியிலே தோன்றினாள். தேவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆச்சர்யம் தாங்கவில்லை. இந்த்ரன் அக்னிபகவானை அனுப்பி வந்திருப்பது யாரென்று தெரிந்துவரச் சொன்னார். அக்னி வந்தவுடன், யக்ஷஸ் நீ யார் என்று வினவ, நான் தான் வேதம் போற்றும் 'ஜாதவேதஸ்' (உலகில் உண்டாகும் எல்லாவற்றையும் அறியும் சக்தியுள்ளவன்) என்றார். உன் சக்தி என்ன என்ற கேள்விக்கு, நான் எல்லாவற்றையும் எரித்து சாம்பலாக்குவேன் என்றார். யக்ஷஸ் உடனே ஒரு காய்ந்தபுல்லை அக்னியின்முன் வைத்து, இதை எரிக்கும்படி சொன்னார். அக்னிக்கு மனத்தில் வேகமே வந்தது. ஜகத்தையே எரிக்கும் சக்திவாய்ந்த என்னை இந்த காய்ந்த

புல்லை எரிக்கச் சொல்லி அவமானப்படுத்துகிறார் யக்ஷஸ் என்ற கோபத்துடன் அதை எரிக்க முற்பட்டார். எவ்வளவு முயற்சித்தும் அந்த புல்லை ஒன்றும் செய்யமுடியாமல் அவமானத்துடன் ஸபைக்கே திரும்பிவிட்டார். தகவலைக்கேட்ட இந்த்ரன் ஆச்சர்யம் தாங்காமல், வாயு பகவானை இப்போது அனுப்பினார். வாயு பகவான் யக்ஷஸிடம் தான் வேதம் போற்றும் 'மாதரிஸ்வா' (அந்தரிக்ஷத்தில் வேகமாகச் செல்லக்கூடியவன்), தன் சக்தியினால் எப்பேர்ப்பட்ட மலையோ, கனமான பொருளோ அதை அசைத்துப் பெயர்க்க முடியும் என்றும் சொன்னார். யக்ஷஸ் முன்போலவே அதே காய்ந்த புல்லை வாயுவின் முன் வைத்து, அதை அசைக்கச் சொன்னார். தன் சக்தி முழுதும் செலவிட்டும் புல்லை அசைக்க முடியாமல் அவமானத்துடன் வாயுவும் திரும்பினார்.

தேவேந்த்ரனின் ஆச்சர்யம் எல்லை மீறிற்று. தானே போய்ப் பார்ப்போம் என்று கிளம்பினார். அவர் நெருங்கு முன்னரே யக்ஷஸ்ரூபம் மறைந்ததைப் பார்த்த இந்த்ரன், அக்னிக்கும், வாயுவிற்கும் அருகில் போய் பேசக் கிடைத்த பாக்யம் கூட தனக்குக் கிடைக்கவில்லையே என்று வருந்தி அவமானப்பட்டதாக நினைத்தார். மானம் இழந்து ஜீவித்திருத்தல் மரணத்திற்குச்சமம். ஆகையால் அங்கேயே அமர்ந்து பராசக்தியை சரண் அடைந்தார். மாயாபீஜ (ஹ்ரீம்) ஜபம் செய்யச் சொல்லி ஆகாசவாணி கேட்கவே, ஆகாரமின்றி ஒரு லக்ஷம் வருஷம் ஜபம் செய்து தபஸில் ஈடுபட்டார். சித்ரை மாதம், சுக்ல நவமி, வஸந்த நவராத்ரியின்போது (ஸ்ரீராமநவமியன்று) மத்யான்னகாலம் பெரிய தேஜஸ் நடுவில் உமா ஹைமவதி, கருணாமூர்த்தியாக, நான்கு பக்கங்களிலும் வேதங்கள் ஸ்தோத்ரம் செய்ய, தர்சனம் தந்தாள். இந்த்ரன் நமஸ்கரித்து, ஸ்தோத்ரித்து, யக்ஷஸ் பற்றி வினவினார். அம்பிகை, யக்ஷஸ் என் ஸ்வரூபமே; ஓங்காரமும், ஹ்ரீங்காரமும் இரண்டுமே என் மந்த்ரங்களே. நிராகார, நிர்குண பரப்ரம்மமாகிய நானே, ஸகுண, ஸாகார ஈஸ்வரி. ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் எல்லாவற்றையும் நடத்தும் மாயாசக்தி என்னிடம் வேறுபாடின்றி உள்ளது. உங்கள் கர்வத்தை அடக்கி அனுக்ரகம் செய்ய வந்தேன். அதுமுதல் தேவர்கள் தேவி உபாஸனையில் தீவிரமாக இருந்தனர்.

கேனோபனிஷத்தில் இதே வ்ருத்தாந்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலேயே, அங்கு கண்ணிற்குக் கண்ணாகவும், காதிற்குக் காதாகவும், வாக்கிற்கு வாக்காகவும், ப்ராணனனுக்கு ப்ராணனாகவும், மனஸிற்கு மனஸாகவும் உள்ள ப்ரம்மத்தை உணர்ந்தவன் இந்த லோகத்திலிருந்து கிளம்பும்போதே, அம்ருதத்வத்தை அடைகிறான் என்று போற்றுகிறது.

(வளரும்)

# முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி



09-07-22 சனிக்கிழமை இரவு ஸ்ரீ மடம் முகாம் சாதுர்மாஸ்ய விரதத்துக்காக காக்கிநாடா (ஆந்திர மாநிலம்) வந்தடைந்தது. காக்கிநாடா எல்லையில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் ஷோபா யாத்திரையை வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஸ்ரீ சாகண்டி கோடேஸ்வரராவ் (திம்மாபுரம் கிராம தலைவர்), ஸ்ரீ பெஜவாடா சத்யநாராயணன் அரசு அலுவலர்கள், உயர் காவல் அதிகாரிகள், கரகம், பஜனை, கோலாட்டம், மங்கள வாத்யம், வேத பண்டிதர்கள், மங்கள திரவியங்கள், பக்தர்கள், கிராம மக்கள், குழந்தைகள் புடைசூழ ஊர்வலமாக வந்து வழியில் குழுமியிருந்த பக்தர்களுக்கு அனுக்ரஹித்தார்கள்.

கோசாலையில் ஸ்ரீ சாகண்டி கோடேஸ்வரராவ் கோசாலை நிர்வாகிகள் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளை வரவேற்றார்கள்.

*10-07-22 அன்று ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் சாமல்கோட்டில் நடைபெற்ற ரதோத்ஸவ வேத சபா (25வது வருஷம்) விழாவில் பங்கேற்றார்கள். பிரதிவருஷமும் இந்த சபா சந்திரபட்லா பதஞ்சலி சாஸ்திரி குடும்பத்தினரால் நடத்தப்படுகிறது. கோலப்பல்ஸகி ஆஞ்சநேயலு சலக்ஷண பண்டிதர்கள் கலந்து கொண்டார்கள். ப்ராம்மண பாகம், சம்ஹிதை, க்ரமம், ஜடை மற்றும் கனம் (கிருஷ்ண யஜுர் வேதம்) பாராயணம் செய்யப்பட்டது. ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் பண்டிதர்களுக்கு சன்மானம் வழங்கி கௌரவித்தார்கள்.*

*25 வருடங்களாக வேத சபா நடத்திவரும் பதஞ்சலி சரஸ்வதி குடும்பத்தில் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுக்கு ஒரு வெள்ளிக்கிரீடம் சமர்ப்பித்து, பாத பூஜையையும் செய்தார்கள். வேத ஸ்வஸ்தி பாராயணத்துடன் வெள்ளிக்கீரிடத்தை தரித்துக் கொண்டார்கள். கூடியிருந்த பக்தர்கள் மிகவும் பக்தியுடன் சந்தோஷித்தார்கள். ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹ பாஷணம் செய்து ஆசி வழங்கினார்கள்.*

*ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடன்* NRI Newsletter *குரு பூர்ணிமா சிறப்பு மலரை வெளியிட்டார்கள். இந்த மலர் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் விஜய யாத்ராவின் விவரங்களையும், வெளிநாடு பக்தர்களுடைய செயல்பாடுகளையும் விவரிக்கிறது.*

*ஸ்ரீமடம் முகாம் காகிநாடாவில் ஜுலை மாதம் 22, 23, 24 தேதிகளில் அகில இந்திய அக்னி ஹோத்திரிகள் சம்மேளனம் நடைபெற்றது. இதில் நாடு முழுவதிலுமாக 140 அக்னி ஹோத்ரிகள் பங்கேற்றார்கள். இஷ்டிகள் ஆகியவை நடந்தன. பூர்த்தி தினத்தன்று அக்னிஹோத்திரிகள் தக்கவாறு ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் திருக்கரங்களால் சன்மானம் செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.*

*ஜுலை மாதம் 25, 26 மற்றும் 27 தேதிகளில் பஞ்சாங்க சதஸ் நடைபெற்றது. இதில் 8 பண்டிதர்கள் மற்றும் 55 பஞ்சாங்க பதிப்பாளர்கள் பங்கேற்றார்கள். வரும் ஸ்ரீ சோபக்ருது வருஷத்திய விசேஷ தினங்கள், விரதங்கள், உபகர்மாக்கள், மற்றும் பூஜைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. விசேஷமாக இலங்கை, சிங்கப்பூர், கம்போடியா போன்ற பதிப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.*

*25-07-22 அன்று (துவாதசி) வைதீகாள் பிக்ஷாவந்தனம் நடைபெற்றது.*

# ஆவணி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 18-08-2022 | வியாழன் | கோகுலாஷ்டமி |
| 20-8-2022 | சனி | சனிரோஹிணி யோகம் |
| 22-08-2022 | திங்கள் | ஏகாதசி |
| 23-08-2022 | செவ்வாய் | த்வாதசி |
| 24-08-2022 | புதன் | ப்ரதோஷ பூஜை |
| 25-8-2022 | வியாழன் | குரு புஷ்யம் |
| 26-08-2022 | வெள்ளி | அமாவஸ்யை |
| 30-08-2022 | செவ்வாய் | சாமோபாகர்மா |
| 31-08-2022 | புதன் | விநாயக சதுர்த்தி |
| 01-09-2022 | வியாழன் | ஸ்வாதி வேத பாராயணம், ரிஷி பஞ்சமி |
| 03-09-2022 | சனி | அனுஷம் வேத பாராயணம் ; அனுஷம் தேர் |
| 05-09-2022 | திங்கள் | மூலம் வேத பாராயணம் ; மூலம் தேர், ஆவணி மூலம் |
| 06-09-2022 | செவ்வாய் | ஏகாதசி, உத்ராடம் தேர், |
| 07-09-2022 | புதன் | த்வாதசி, உத்ராடம் வேத பாராயணம் |
| 08-09-2022 | வியாழன் | ப்ரதோஷ பூஜை; அவிட்டம் தேர் |
| 09-09-2022 | வெள்ளி | அவிட்டம் வேத பாராயணம்; பௌர்ணமி பூஜா |
| 10-09-2022 | சனி | மஹாளய பக்ஷாரம்பம், விஸ்வரூப யாத்ரா |
| 13-09-2022 | செவ்வாய் | பௌமாஸ்வினி |
| 14-09-2022 | புதன் | மஹாபரணி |
| *19-08-2022; 26-08-2022; 02-09-2022; 09-09-2022; 16-09-2022* வெள்ளிக்கிழமை பூஜை | | |

# சாணக்ய ஸுபாஷிதம்

### நர ஜன்மம் துர்பலம்

**புனர் வித்தம் புனர்மித்ரம் புனர் பார்யா புனர் மஹீ**

**ஏதத் ஸர்வம் புனர் லப்யம் நரத்வம் ந புன; ந புன: 16**

*பணம், மித்ரன், மனிவி பூதலம் இவைகளை மீண்டும் மீண்டும் அடையலாம். நர ஜன்மம் கிடைப்பது துர்லபம்.*

### ஆத்ம அபராதம்

**தாரித்ரிய ரோக துக்கானி பந்தன வ்யஸனானி ச**

**ஆத்ம அபராத வ்ருக்ஷஸ்ய பலான்யேதானி தேஹினாம் 17**

*தரித்ரம், ரோகம், சிறை வாஸம் இன்னும் பல இன்னல்கள் யாவும் ஆத்ம அபராதங்களின் பலன்தான். (ப்ரஞ்யைக்கு எதிராகச் செய்யப்படும் செயல்கள் ஆத்ம அபராதம் எனப்படும்)*

### தாய் நாடு

**மாதா கமலா தேவீ பிதா தேவோ ஜனார்தன;**

**பாந்தவா விஷ்ணுபக்தாச்ச ஸ்வதேசோ புவந்த்ரயம் 18**

*லக்ஷ்மீ தாய், ஜனார்தனன் தந்தை விஷ்ணுபக்தர்களோ பந்துக்கள் மூவுலகும் தாய் நாடாகும்.*

### பூர்வ வினை

**யதா தேனு ஸஹஸ்ரேஷு வத்ஸோ கச்சதி மாதரம்**

**ததா யச்ச க்ருதம் கர்ம கர்தாரம் அனுகச்சதி ॥ 19**

*ஆயிரம் பசுக்களில் கன்று எப்படி தன் தாயையை அடையுமோ அப்படியே பூர்வ வினைகள் கர்த்தாவைச் சென்று அடையும்.*

### விதியின் விளையாட்டு

**பத்ரம் நைவ யதா கரீரவிடபே தோஷோ வசந்தஸ்ய கிம்?**

**தூகோ நைவ விலோகதே யதி திவா ஸூர்யஸ்ய கிம் தூஷணம்?**

**தாரா நைவ பதந்தி சாதகமுகே மேகஸ்ய கிம் தூஷணம்**

**யத்பூர்வம் விதினா லலாடலிகிதம் தன்மார்ஜிதும் க: க்ஷம; ? 20**

*செடியில் துளிரில்லை. வஸந்தத்தின் குற்றமா? ஆந்தை பகலில் பார்ப்பதில்லை, பகலவனின் குற்றமா? மழைத்துளி சாதக பக்ஷியின் வாயில் விழவில்லை, மேகத்தின் குற்றமா? விதியினால் முன்னால் நெற்றியில் எழுதப்பட்டது. அழிக்க யாரால் முடியும்.*

**முன்னாலே தீர்மானம்**

**ஆயு:கர்ம ச வித்தம் ச வித்யா நிதனமேவ ச**

**பன்சைதானி ஹி ஸ்ருஜ்யந்தே கரபஸ்தஸ்யைவ தேஹின: 21**

*ஆயுள், வேலை, தனம், கல்வி, மரணம் இவ்வைந்தும் மனிதன் கர்ப்பத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றன.*

**காலம்**

**கல: பசதி பூதானி கல: ஸம்ஹரதே ப்ரஜா:**

**கால: ஸுப்தேஷு ஜாகர்தி காலோ ஹி துரதிக்ரம: ॥ 22**

*பூதங்களை சமைக்கிறது காலம், அதுவே அழிக்கிறது. தூங்கும்போது விழிப்புடனிருக்கிறது. அதை விட்டுவிடுவது ஸ்ரமம்.*

**புத்தி**

**யாத்ருசீ ஜாயதே புத்திர்வ்யவஸாயோபி தாத்ருஸ:**

**ஸாஹாயதாத்ருசா ஏவ யாத்ருசீ பவிதவ்யதா ॥ 23**

*புத்தி எப்படியோ அப்படியே வேலையும் வேலையாட்களும், நடக்கப் போவது அனைத்தும் இப்படித்தான்.*

**மேலும் கீழும்**

**ரங்ககங்கரோதி ராஜனம் ராஜனம் ரங்கமேவ ச**

**தனினம் நிர்தனம் சைவ நிர்தனம் தனினம் விதி: 24**

*கீழே இருப்பவன் அரசனாகிறான். அரசன் கீழனாகிறான். விதியினால் பணக்காரன் ஏழையாக, ஏழை தனவானாகிறான் .*

ப்ரதீபப் பேழை

# சங்கர கீதை

ர. வேங்கடரத்தினம்

உள்ளத்திற்கு அமைதி தோன்ற, முதலில் ஆசைகளைத் துறத்தல் வேண்டும்.

विहाय कामान् यः सर्वान् पुमांश्चरति निः स्पृहः ।
निर्ममो निरहंकारः स शान्तिमधिगच्छति ।।

**விஹாய காமாந் ய: ஸர்வாந் புமாந்ஸ் சரதி நி: ஸ்ப்ருஹ: ।**
**நிர்மமோ நிரஹங்கார: ஸ ஸாந்திமதிகச்சதி ॥**



எவன் எல்லா விருப்பங்களையும் விடுத்து ஆசையற்றவனாகி, நான் எனது என்னும் எண்ணங்கள் இல்லாதவனாக இருக்கிறானோ அவன் சாந்தி பெறுகிறான். மம என்றால் என்னுடையது, அஹம் என்றால் நான். இந்த இரண்டு எண்ணப்பாடுகள் முறையே மமகாரம், அஹம்காரம் எனப்படுகின்றன. புறப்பற்று, அகப்பற்று என்னும் அழகிய தமிழ்ச் சொற்கள் இவற்றைக் குறிப்பிடும்.

இந்தப் பற்று இரண்டும் இல்லாமல், ஆசை நீங்கப் பெற்றவனாக இருப்பவன் மன அமைதியில் ஆழ்ந்து இன்பம் நுகர்கிறான். விராக: என்பது நிஸ்ப்ருஹ: என்ற நிலையேதான். பற்றற்ற நிலை ஆனந்த வாழ்வுக்குத் திறவுகோல் போல.

**இன்பம் என்பதுதான் என்ன?**

ஆசைகளைக் களைந்தால் ஆனந்தம் விளையும், என்றெல்லாம் கூறியது முற்றும் சரி. முதலில் இந்த ஆனந்தம் என்பதற்கே ஒரு விளக்கம் வேண்டுமே. மெய்யான இன்பம் எது? வரையறை ஒன்று வேண்டும். இன்பம் என்பது எது?

பரப்பிரம்மத்தோடு மனம் இணைந்து நிற்குமேயானால், மேலான இன்ப நிலையை அநுபவிக்கலாம். இதுவே பிரம்மானந்தம் என வழங்குகிறது. பரம்பொருளினிடத்தில் உள்ளம் மட்டும் பொருந்தி நின்றால் போதும். வேறு நிர்பந்தங்கள், சூழ்நிலைகள் அந்த இன்பத்தை மாற்றிவிடா; மட்டுப்படுத்திவிடமாட்டா. யோக நிலையில் நிற்பவன் ஆயினும் இது பொருந்தும். யோகநிலையில் இருப்பவனும் பரம்பொருளினிடம் மனத்தைப் பறிகொடுத்து விட்டால் பரமானந்தம் எய்துவான். கூட்டத்தில் கூடிக் காலம் கழிப்பவன் ஆயினும் சரி, ஏகாந்தம் நாடிச் செல்பவன் ஆயினும் சரி, மனம் மட்டும் இறையினிடம் லயித்து நிற்றல் போதும் என்று அழுத்தந் திருத்தமாக ஆசார்யர் அருள்கிறார்.

योगरतो वा भोगरतो व सङ्गरतो वा सङ्गविहीन: ।
यस्य ब्रह्मणि रमते चित्तं नन्दति नन्दति नन्दत्येव ।।

**யோகரதோ வா போகரதோ வா ஸங்கரதோ வா ஸங்கவிஹீந : ।**
**யஸ்ய ப்ரஹ்மணி ரமதே சித்தம் நந்ததி நந்ததி நந்தத்யேவ ॥**

இங்கே, பகவத்பாதரின் அருளுரையிலுள்ள உறுதிப்பாடு கவனிக்க வேண்டியதொன்று ஆகும். 'நந்ததி' என்று மும்முறை கூறியதோடு அல்லாமல், 'நந்தத்யேவ' என்று ஆனந்தம் அடையவே செய்கிறான் என்னும் தொனியில் அறைந்து கூவுகிறது கடைசிப் பகுதி. யோகி, போகி, ஏகாங்கி என்னும் வேறுபாடுகள் பரப்பிரம்ம நிலையில் நிற்பதில்லை.

बाह्यस्पर्शेष्वसक्तात्मा विन्दत्यात्मनि यत् सुखम् ।
स ब्रह्मयोगयुक्तात्मा सुखमक्षयमश्नुते ।।

**பாஹ்யஸ்பர்ஸேஷ்வஸக்தாத்மா விந்தத்யாத்மநி யத் ஸுகம் ।**
**ஸ ப்ரஹ்மயோகயுக்தாத்மா ஸுகமக்ஷயமஸ்நுதே ॥**

'குறைவில்லா ஆனந்தம் பெறுகிறவன் பிரம்ம நிலையில் மனத்தைப் பொருத்தி நிறுத்தியுள்ளவன்' என்கிறார் கீதாசாரியன். வெளித் தொடர்புகளில் உள்ளத்தைப் பறி கொடுக்காதவன் ஆத்மாவில் இன்பம் அநுபவிக்கிறான். பிரம்மநிலையில் பொருந்திய மனத்தை உடையவன் தெவிட்டாத இன்பம் நுகர்கிறான். இந்தக் குறைவிலா ஆனந்தமே பிரம்மானந்தம் என்னும் மெய்யின்பம் ஆகும். சிவானந்தத்தில் திளைக்கும் பேருள்ளங்கள் சிவத்துவத்திலேயே மூழ்கி நிற்பன. அக்ஷய ஸுகம் என்பதற்கு இணையாகத்தான் ஆசார்யர் மூன்று 'நந்ததி' கூறுகிறார்.

**கீழோர்க்கு முக்தி ஏது?**

பரம்பொருள் உணர்வு கைகூட வேண்டும். ஆத்மஞானம் அல்லாத மட்டில், கடைத்தேறுவதற்கான வழி ஏதுமே இல்லை. இந்த உண்மையைக் கூற வரும் இடத்து, ஆதி சங்கர பகவத்பாதர் வெகு எரிச்சலோடு, 'நூறு தரம் பிறப்பு எடுத்தால்தான் என்ன, ஒரு பயனும் இராது' என்பது போலச் சொல்கிறார். எத்துணை முறை செத்துச் செத்துப் பிறப்பெடுத்தாலும், ஞானமில்லாதவன் மேல் கதியை அடைய மாட்டான். இத்தனைக்கும் அவன் செய்திருக்கும் புண்ணிய காரியங்கள் எவ்வளவோ இருக்கலாம். கங்கை கடலில் கலக்கும் கட்டத்திற்குப் போய்க் கடலாடியிருப்பான்; விரதங்களை மேற்கொண்டு தானம் செய்திருப்பான். ஆயினும், பரம்பொருள் அறிவு உண்டாகாவிட்டால் என்ன பயன்? காசியாத்திரை, சேது ஸ்நானம் வீணே !

कुरुते गङ्गासागरगमनं व्रतपरिपालनमथवा दानम् ।
ज्ञानविहीन सर्वमतेन मुक्तिं न भजति जन्मशतेन ।।

**குருதே கங்காஸாகரமநம் வ்ரதபரிபாலநமதவா தாநம் ।**
**ஜ்ஞாநவிஹீந: ஸர்வமதேந முக்திம் ந பஜதி ஜந்மஸதேந ॥**

இங்கே 'ஜ்ஞாநவிஹீந:' என்பது ஆசார்யரின் வார்த்தை. கண்ணபிரான் தேவாஸுரஸம்பத்விபாக யோகத்தில் मूढा: மூடர்கள் என்ற சொல்லை ஆள்வார்.

आसुरीं योनिमापन्ना मूढा जन्मनि जन्मनि ।
मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम् ।।

**ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மதி ।**
**மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம் ॥**

முன்பு கூறிய ஜன்மசதப் பேச்சு, இங்கே பகவான் வாக்கிலும் வருகிறது. 'ஜந்மநி ஜந்மநி' என்று இரண்டு தரம் சொல்லிக் கண்ணபிரானும் அறிவிலிகளின் ஒரு பயனுமில்லாப் பிறப்பைச் சாடுகிறார்.

அசுர யோனிகளில் வீழ்ந்து மீண்டும் பிறப்பெடுக்கும் மூடர்கள் இறைவனை அடைவதே இல்லை. வரவரக் கீழ்நோக்கியே சென்று கொண்டிருப்பவர்கள் அசுரப் பிறவிகள். இந்த ச்லோகத்தில் கண்ணபிரான் ஆண்டுள்ள சொற்கள், பஜகோவிந்தத்து வாக்கியமான 'புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீஜடரே ஸயநம்' என்பதை நினைவூட்டுவனவாக உள்ளன.

கீழோர், அசுரப் பிறப்புகள், மூடர்கள் - இவை யாவும் பரம்பொருளை உணரவொண்ணாத அறிவிலிகக்கு வேறு பெயர்கள் போலும். சங்கரரே பஜகோவிந்தம் 26-ஆம் ச்லோகத்தில், ஆத்மஞானம் அற்றவர்களை மூடர்கள் என்று அழைக்கிறார். அந்த மூடர்கள் நரகத்தில் இடர்படுகிறார்கள் என்றும் கூறுகிறார்.

आत्मज्ञानविहीना मूढास्ते पच्यन्ते नरकनिगूढा :।

**ஆத்மஜ்ஞாநவிஹீநா மூடாஸ் தே பச்யந்தே நரகநிகூடா: ।**

அந்த மூடர்கள் தாம் அசுரர்களும்

**வீண்வாதம் ஏன்?**

சங்கரர் ஸோபான பஞ்சகத்தில் பயனில்லாத அறிவியல் தர்க்கங்களைத் தவிர்க்குமாறு கூறுவார். दुस्तर्कात् सुविरम्यताम् துஸ்தர்க்காத் ஸ்விரம்யதாம் என்பது மூன்றாம் ச்லோகத்தில் வரும் ஓர் அருளுரை 'வீண்வாதங்களில் ஈடுபட வேண்டாம்' என்று கூறியபின், மீண்டும் கடைசி அடியில் திரும்பச் சொல்கிறார்.

बुधजनैर्वाद: परित्यज्यताम् ।

**புதஜநைர் வாத: பரித்யஜ்யதாம் ।**

இதன் பொருள்: அறிவு மிக்கோருடன் எதிர்வாதத்தைத் தவிர். இதைப் போலவே, பஜகோவிந்தம் முதல் ச்லோகமும் இலக்கண சரித்திரத்தை இறக்குவது போலப் பேசுகிறது.

# விபூதியும் அதன் மகிமையும்

-ஸ்ரீ S. V. பரமேஸ்வரன்
(ஸாஹித்ய சிரோமணி, ஸாஹித்ய விசாரதா)

மொழிகளில் மிக இனிமையான எளிமையான ஒரு மொழி என்றால் அது தமிழ் மொழி என்றே சொல்லலாம். கற்பனை வளமும் சொல் வலிமையும் பெற்ற தமிழ் இலக்கியச் சோலையிலே, இனிய கனிகள் நிறைந்த மரங்கள் ஏராளம். இம்மரங்களில் திருமூலர் திருமந்திரம் என்பது ஒரு மரம். அதில் பூத்து, மலர்ந்து, காய்ந்த கனிகள் நிறையவே உண்டு.

இத்திருமூலர் திருமந்திரத்தை இயற்றிய மூலர் என்ற மகான், மனிதன் நோயின்றி இறை இன்பத்துடன் வாழ வழி சொல்கின்றார்.

விபூதி என்றால் ஐச்வர்யம் என்று அர்த்தம். இதையே தமிழ் மொழியில் 'திருநீறு' என்று சொல்கிறோம். திருநீறை அன்றாடம் பூசிக்கொள்ள வேண்டும்.

இதனை உடலில் பூசிக் கொள்வதினால் நாம் அடையும் பயன் ஏராளம். உடல், மனம், வாக்கு இவை மூன்றும் சுத்தமாக இருக்க வேண்டும். உடல் சுத்தம் ஜலத்தால் ஏற்படும். இது ஜல ஸ்னானம். மந்திரங்களை உச்சரித்து உச்சரித்து மனத்தை சுத்தம் செய்ய வேண்டும். இது மந்திர ஸ்னானம். அடுத்து அக்னேய ஸ்னானம் என்று மூன்றாவதாக ஒரு ஸ்னானம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸ்னானத்தை எப்படி செய்ய வேண்டும்? இந்த இடத்தில் தான் விபூதி மகிமை தெரிய வருகிறது.

## கடவுளின் வீடு

உடல் என்பது கடவுள், தான் இருப்பதற்காக ஏற்படுத்திக் கொண்ட ஒரு வீடு என்று கொள்ள வேண்டும். எல்லோர் இதயத்திலும் இறைவன் இருக்கின்றான். கடவுள் குடியிருக்கும் வீட்டை மாசுபடியும் பொழுது அதை ஜலத்தால் சுத்தம் செய்வதையே, நாம் ஸ்னானம் என்கிறோம். காலை மாலை என்று நித்தமும் நாம் ஸ்னானம் செய்கிறோம். இந்த ஸ்னானம் நமக்கு மிகவும் தேவைப்படுகிறது.

மன அழுக்கை களைய மந்திர ஸ்னானம் செய்ய வேண்டும். அதற்கு என்று சில மந்திரங்கள் உண்டு. அவற்றை உச்சரித்துக் கொண்டே தலையில் நீரை ஊற்றிக் கொள்ள வேண்டும். பிறகு, அவரவர் அறிந்த மந்திரத்தையோ அல்லது பகவான் நாமாவையோ பல தடவை திருப்பி

திருப்பி உச்சரித்து ஜபம் செய்து மனத்தில் படிந்திருக்கும் அழுக்கினை அகற்ற முயற்சிக்க வேண்டும். ஜபம் செய்து மனமும் சுத்தமாக்கப்பட்டால் அதில் படிந்திருக்கின்ற காமம், க்ரோதம் முதலிய மலங்கள் விலக்கப்பட்டு சுத்தமாகி சாந்தியடையும். நம் மனமும் ஒடுங்கும், அடங்கும்.

நீராடுவது போன்று, மந்திர ஸ்னானம் போன்று, நெருப்பிலேயும் ஸ்னானம் செய்ய வேண்டும். இதற்கு 'ஆக்னேய ஸ்னானம்' என்று பெயர். அக்னியில் எப்படி ஸ்னானம் செய்வது என்று கேட்க தோன்றுகிறதல்லவா? இந்த இடத்தில்தான் விபூதியின் மகிமை சொல்லப்படுகிறது. விபூதியை பூசிக்கொண்டால் அது 'ஆக்னேய ஸ்னானம்' என்று ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன. स्नानं त्रिविधं प्रोक्तं **ஸ்நானம் த்ரிவிதம் ப்ரோக்தம்'** என்றும் -'பஞ்சவிதம்' -குளியல் மூன்று விதம் என்றும், ஐந்து விதம் என்றும், சில இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆக்னேய ஸ்னானத்தை செய்ய, திருநீறை அதாவது விபூதியை எப்படி தயாரிப்பது என்றும் சாஸ்த்திரத்தில் கூறி இருக்கிறது.

**விபூதி தயாரித்தல்**

'காராம்பசு'வின் (காராம்பசு = நாக்கு கருமை நிறம் உடைய பசு). சாணத்தை அது இடுகின்ற நேரம் பார்த்து, அதன் அருகில் சென்று, அது இடும் சாணம் தரையில் விழுவதற்கு முன்பு, தன் இருகைகளிலும் ஏந்தி சேமித்து வைத்து, உருண்டை உருண்டையாக செய்து வெய்யிலில் நன்றாக காயவைத்து, கார்த்திகை மாதம் சூரியனுடைய நட்சத்திரமான கார்த்திகை நட்சத்திரம் கூடிய பௌர்ணமியன்று, ஒரு சுத்தமான இடத்தில் மாக்கோலம் இட்டு, உமியை பரப்பி சாண உருண்டைகளை அடுக்கி வைத்து, விதிப்படி பூஜை செய்து, மந்திரம் உச்சரித்து தீ மூட்டி வேக வைக்க வேண்டும். உருண்டைகள் வெந்து வெண்ணிறத்தில் ஆகி விடும். அந்த சாம்பல்தான் திருநீறு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விபூதியில் மகத்தான சக்தியும் இருக்கிறது. இப்படி சாம்பஸ ஸம்ஸ்காரத்துடன் செய்வதால்தான் இதற்கு திருநீறு என்று பெயர். இதை பூசுவதால் நமக்கு பலவிதமான நன்மைகள் ஏற்படுகின்றன.

**மாட்டுச் சாணத்தில் கந்தகம்**

திருநீர் அணிவது என்பது ஒரு மூட நம்பிக்கையான பழக்கம் என்று நினைப்பவர்களும் கூட, இதை இட்டுக் கொண்டு நன்மைகளை பெற முடியும். நம் உடலுக்கு 'கந்தகம்' என்னும் தாதுபொருள் மிக மிக அவசியமான

ஒன்று. நாம் உண்ணும் உணவில் இந்த கந்தகம் குறைவாக இருக்குமேயானால், அதை ஈடு செய்ய இந்த விபூதி உதவுகிறது. மாட்டுச்சாணத்தில் கந்தகம் அடங்கியிருக்கிறது. இந்தச் சாணத்தை எரிவாயுவாக மாற்றி எரிக்கப்படுகிறது. ஆக மாட்டுச்சாணத்தால் ஆன விபூதியை கொள்வதால் தோல் வியாதி அகலும், மனத்துக்கு நிம்மதி கிடைக்கும்.

அன்றைய முனிவர்களும் தபஸ்விகளும் விபூதியை ஏன் பூசிக் கொண்டார்கள் என்று சிறிது சிந்தித்துப் பார்த்தோமேயானால், நமக்கு இந்த உண்மை தெரியவரும். அதாவது கந்தகம் உடலுக்கு தேவையான ஒரு பொருள். அதை உண்டு பெறுவதை விட உடலில் பூசி பெறலாம் என்ற உண்மையை அன்றைய மாமுனிவர்களும் ரிஷிகளும் அறிந்திருந்தார்கள். எனவே அதையே நாமும் பின்பற்ற வேண்டும்.

### கவசமாக அமைவது விபூதி

இன்றைய இளைய தலைமுறையினர் விபூதியை பூசிக் கொள்ள தயங்குகிறார்கள். இதன் மகிமையை உணர்ந்தால் இத்தயக்கம் விலகிவிடும். இந்த விபூதி மனிதர்களுக்கு கவசமாகவும் அமைகிறது. பகவான் பரமேசுவரன் இதையே பூசிக்கொள்கிறான். உடல் முழுவதும் பூசி பூரிப்படையும் கடவுள் சிவபெருமான்.

சிவபெருமானைப் பற்றி, அவர் பூசும் விபூதியைப் பற்றி, திருமூலர்

நான்கு வரிகளில்,

கங்காளன் பூசும் கவச திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வாரேயாகில்
தங்காவினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான சிவனடி சேர்வரே,

-என்று பாடியிருக்கிறார்.

இதன் பொருள் என்னவென்றால்,

சிவபெருமான் பூசும் திருநீற்றை பூசினால், அது நமக்கு கவசமாக செயல்படும். அழியாத வினைப்பயனும் அடியோடு அழிக்கப்பட்டுவிடும். அது சிவன் பால் போய் சென்று விடுகிறது. முடிவில் நாமும் சிவனடி அடைவோம் என்பதாகும்.

விபூதியை பூசிக்கொள்வதால் உண்டாகும் நன்மையை உணர்ந்து எல்லோரும் இதை பூசிக்கொள்ள வேண்டும். இதுவரை பூசாதவர்கள் இனியாவது பூசி பயனடைய வேண்டும். ஆண்டவனை ப்ரார்த்திக்க ஆலயம் செல்ல நேரம் இல்லாதவர்கள்,

இந்த விபூதியை பூசினாலே அவர்களுக்கும் நற்கதி கிடைக்கும் என்று திருமூலர் திருமந்திரம் கூறுகிறது.

இந்த விபூதியின் மகிமையை அறிந்துக் கொண்ட நாம், அதை உடலில் எந்த எந்த இடங்களில் எப்படி எப்படி பூசவேண்டும், எந்தெந்த நேரத்தில் பூசிக் கொள்ள வேண்டும் என்பதையும் தெரிந்துக் கொண்டு செய்தல் வேண்டும்.

**விபூதி பூசும் நேரமும், இடமும்**

அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு, உடலை சுத்தம் செய்து கொண்டு சூரியன் உதிக்கின்ற வேளையிலும், மாலையில் கை கால் முகம் ஆகியவற்றை அலம்பிக் கொண்டு சூரியன் அஸ்தமிக்கின்ற நேரத்திலும், காலையில் கிழக்கு முகமாகவும், மாலையில் மேற்கு முகமாகவும் அமர்ந்துக் கொண்டு, உடலின் முக்கிய அங்கம் என்று சொல்லப்படுகின்ற, நெற்றித் தடத்தில் மூன்று முறை த்ரிபுண்ட்ரமாகவும், மார்பிலும், உதரத்திலும், இரு தோள்களிலிருந்து மார்பின் இருப்பக்கங்களிலும், இரு முழங்கைகளிலும், இரு மணிபந்தங்களிலும், கழுத்து இரு பக்கங்களிலும் பூசிக் கொள்ள வேண்டும்.

இதை பூசும்பொழுது, 'சிவ நாமத்தை' உச்சரித்துக் கொண்டே பூசுவது நல்லது. அல்லது ஸ்ரீ ருத்ர ப்ரச்சனத்தில் வருகின்ற,

**த்ர்யம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம் ।**

**உர்வாருகமிவ பந்தநாத் ம்ருத்யோர் முக்ஷிய மாம்ருதாத் ॥**

என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டும் பூசலாம். விபூதி பூசும் சமயத்தில் இம்மந்திரத்தை ஏன் உச்சரிக்க வேண்டும் என்றால், அந்த நேரத்திலாவது நாம் நம் மனதை ஒரு முகப்படுத்தி பகவானை நினைக்க வேண்டும் என்பதினால்தான். ஆகவே விபூதியை எல்லோரும் பூசிக் கொண்டு நல்ல பயனை அடையவேண்டும்.

விபூதி என்பது அருமருந்தாகவே நமக்கு அமைகிறது. தன்வந்தரி என்பவர் ஆயுர்வேத வைத்தியத்தின் கடவுளாக கொண்டாடப்படுகிறார். அச்விநி தேவர்கள், தேவர்களின் வைத்தியர்களாவார்கள்.

ஆனால் குடும்பிகளான நமக்கு ஆதி குடும்பியானவர் சிவபெருமான் என்று ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர் தனது சிவாநந்தலஹரியில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், **'அத்யவோ சததி வக்தா ப்ரதமோ**

**தைவ்யோபிஷக்''** என்ற ஸ்ரீ ருத்ரம் வாக்கியத்தின் படி, அவர் ஆதி குடும்பி மட்டுமல்ல, ஆதிவைத்தியரும் அவர்தான் என்று கூறுகிறது.

ஆகவே, நாம் எல்லாரும் திருநீறு அணிந்து சுகமடைவோமாக. மக்கள் சுகமடைய நமது சாஸ்த்திரத்தில் பலவழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் விபூதியை பூசி சுகமடைவது என்பது மிக சுலபமான, எளிமையான வழி என்பதை நாம் அறிய வேண்டும்.

# தர்ம சாஸ்த்ரம் பூஜை சில விளக்கங்கள்

1. குளிக்காமல் எந்த வைதிக கார்யங்களையும் செய்யக் கூடாது
2. மணி அடிக்கமல் பூஜையை ஆரம்பிக்கக் கூடாது
3. ஒரு வஸ்த்ரத்துடனோ, ஈரத்துணியுடனோ பூஜை, ஜபம் முதலிய கார்யங்களை செய்யக் கூடாது
4. ஸந்த்யா காலங்களில் கண்டதையெல்லாம் சாப்பிடக்கூடாது
5. பவித்ரத்தை கையில் அணிந்து கொண்டு எதுவும் உண்ணக்கூடாது.
6. உண்ணும் போது கோவிந்த கோவிந்த என்று சொல்லிச் சாப்பிட வேண்டும்

9. வாயினால் ஊதி தீபத்தை அணைக் ககூடாது.
10. ஹோமாக்னியில் கண்ட குப்பைகளைப் போடக்கூடாது, ஹோமம் முடிந்தபின் குண்டத்தை மூடக்கூடாது.
11. சமையல் அடுப்பினருகில் செருப்புப் போட்டுக் கொண்டுச் செல்லக் கூடாது.
12. மாதவிலக்கான ஸ்த்ரீ நெருப்பு மூட்டக்கூடாது, சமையல் செய்யக் கூடாது.
13. ஒரே வருடத்தில் இரண்டு ஸுமங்கலி ப்ரார்த்தனை செய்யக்கூடாது.
14. வீட்டிற்கு வரும் ஸுமங்கலிகளுக்கு கும்குமம் கொடுக்காமல் அனுப்பக் கூடாது.
15. வேறு நபர் பயன்படுத்திய மாலை வஸ்த்ரம் பாதரக்ஷை இவைகளை பயன்படுத்தக்கூடாது.
16. கன்னத்தில் கை வைத்துக் கொண்டு உட்காரக் கூடாது.
17. துறவிகளுக்கு நமஸ்காரம் செய்தபின் அபிவாதனம் சொல்லக் கூடாது.
18. கோலம் போடும் போது இரண்டு இழையால் போடவேண்டும்.

19. அன்று அன்று மடியாக ஜலம் எடுத்து வந்து அபிஷேகத்தை செய்ய வேண்டும்.

20. பூஜை பொருட்களையோ, தைவப்ரஸாதங்களையோ சாப்பிட்டு விட்டு மேஜை மீது வைக்கக் கூடாது.

21. ஆலயதர்சனம் முடிந்தவுடன் த்வஜஸ்தம்பத்தின் அருகில்தான் நமஸ்கரிக்க வேண்டும்.

22 ஆஸனம் இல்லாமல் எந்த ஒரு ஜபத்தையோ, பூஜையையோ செய்யக் கூடாது.

23. பூஜக்கு என்று தனிப்பாத்ரங்களை பயன்படுத்தவும். எச்சில் பாத்ரங்களை பயன் படுத்தக் கூடாது.

23. நவராத்ரிபூஜையை இரவு 9 மணிக்குமேல் ஆரம்பித்துச் செய்யக் கூடாது.

24. வேத மந்த்ரங்களை புஸ்தகம் பார்த்து சொல்லக்கூடாது.

25. காயத்ரீ மந்த்ரத்தை ராகம் போட்டுப் பாடுவதோ, ரிங்டோனாகப் பயன்படுத்தக் கூடாது.

26. வீட்டு வாசல் படியில் தலை வைத்துப் படுக்கக் கூடாது

27. பூணூலில் சாவிகளை மாட்டி வைக்க கூடாது

28. பூஜை செய்யும்போது ருத்ராக்ஷ மாலை அல்லது ஜபமாலை அணிந்து செய்வது உத்தமம்.

28. பெண்கள் அங்கப்ரதக்ஷணம் செய்யக்கூடாது

29. திருமண மண்டபங்களில் மேடைமீது செருப்புடன் ஏறக்கூடாது.

30. குடிக்கத் தண்ணீர் கேட்பவர்களுக்கு தண்ணீர் தராமல் இருக்கக்கூடாது.

31. பிறந்த நாளை ஆங்கில தேதியில் கொண்டாடக் கூடாது. தமிழ் நட்சத்திரத்தில்தான் கொண்டாட வேண்டும்.

32. தலை முடியை கட்டிகொள்ளாமல் பெண்கள் எந்த கார்யத்தையும் செய்யக் கூடாது.

33. தர்மசிந்தனையுடன் யார்க்கும் தம்மால் ஆகும் உதவியைச் செய்ய வேண்டும்.

33. காசி, கயா போன்ற இடங்களில் வைதிக கர்மா செய்பவர்கள் அங்கு உள்ள புரோகிதர்களையே வாத்யாரகக் கொள்ளவேண்டும்.

34. நவராத்ரியில் கொலு வைத்துவிட்டு வெளியூர் ப்ரயாணம் செய்யக்கூடாது.

35. நாமஜபம் செய்பவர்கள் ஸந்த்யா வந்தனம் தர்ப்பணம் போன்ற கர்மானுஷ்டானன்களை செய்யாமல் இருக்கக்கூடாது.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

**புலவர் மா வெங்கடேசன்**



பூர்வ நினைவு இந்த லிங்கங்களைப் பற்றி இவருக்கு எல்லாம் தெரியும் என்று எப்படி பெரியவா கூறினார் என்று வியப்புடன் இருந்தேன்.

அப்போது ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. ஒரு சமயம் பெரியவா ஏதோ புத்தகம் ஒன்றை படித்துக் கொண்டிருந்தார்கள். அருகில் இருந்தவர்கள் அமைதியாய் இருந்தனர். பின்பு அவர்களுக்கு அனுக்ரஹம் செய்தபின் அடியேனை நோக்கி ''உனக்கு மெய்கண்டார் கழகம் திரு ஞான ஸம்பந்த முதலியாரோடு பழக்கம் இருந்து வந்ததா?'' என்று கேட்டார்கள்.

நான் உடனே அவருடன் 1965 வருடத்திலிருந்தே தொடர்பு கொண்டிருந்தேன். அவர் காஞ்சித்தல வழிபாட்டில் அடிக்கடி எனக்குச் சொற்பொழிவு போடுவார்கள்'' என்றேன் பெரியவா ''காஞ்சீ புராணம் முழுசா படிச்சிருக்கியா? என்றார்கள். நான் ஓரளவு படிச்சிருக்கேன், இன்னும் படிச்சிக்கிட்டு வரேன்.'' என்றேன். அதிலே யோகாசர்யர்கள் வரலாறு தெரியுமா'' என்று வினவினார். நான் ''முழுமையாத் தெரியாது, புராணத்துல கூட சுருக்கமாய்த்தான் சொல்லியிருக்கு, ஒவ்வொருவரைப் பற்றியும் தனித் தனி வரலாறு இல்லை'' என்றேன். அப்போது பெரியவர்கள் யோகாசார்யர்கள் பற்றி விளக்கமாகத் தெரிவித்து வடக்கே கோவிந்தவாடி தக்ஷிணாமூர்த்தி க்ஷேத்ரத்திலிருந்து ஸர்வதீர்த்தம்

வரை நிறைய லிங்கப் ப்ரதிஷ்டைப் பண்ணியிருக்கா.

அவை இப்போ பார்க்கும்படியா இல்லை. மண்ணிலேயோ புதர்களிலோ மறைஞ்சியிருக்கும் என்று கூறி மெய்கண்டார் வழிபாட்டிலே இந்த மூர்த்திகள் ஆலயங்கள் பற்றித் தெரியுமா என்றார்கள். நான் அந்த விஷயம் பற்றி அவர்களிடமே கேட்டு ஒரு பட்டியல் எழுதி வைத்துள்ளேன், அதைப் பார்த்தால் தெரியும் என்றேன். அப்படீன்னா அந்த லிஸ்டைக் கொண்டுவா என்று கூற நானும் அப்பட்டியலைத் தேடினேன்.

ஆனால் அந்தப் பட்டியல் முழுமையாகக் கிடைக்கவில்லை. 75 கோயில்கள் மட்டுமே உள்ள ஒரு பகுதி கிடைத்தது. அதிலும் யோகாசார்யர்கள் வழிபட்ட மூர்த்திகள் இல்லை. இருப்பினும் அந்த பட்டியலை பெரியவரிடம் ஸமர்ப்பித்தேன். குறைகளையும் சொன்னேன். அதைப் பார்த்துவிட்டு அதை எனக்குத் திருப்பித் தந்துவிட்டார்கள். இந்த அளவு காஞ்சீபுராணம், அதில் கூறப்பட்டுள்ள ஆலயங்கள் பற்றி பெரியவரிடம் விண்ணப்பித்துக் கொண்டவை. அதனால் தான் என்னைக் கூப்பிட்டு இவனுக்கு வரலாறு தெரியும் என்று கூறினார்களோ என்று எண்ணியபோது இந்த நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

(தொடரும்)

## தர்ம சாஸ்த்ரம் பூஜை சில விளக்கங்கள் தொடர்ச்சி

36. பூஜைக்கான புஷ்பங்களை , பழங்களை எச்சில் தட்டில் வைக்ககூடாது.

37. ஆலயத்தில் எந்த ஒரு தனிமனிதரையும் வணங்கக்கூடாது.

38. புண்ய நதிகளில் ஸ்னானம் செய்பவர்கள் நதி நீரை ப்ரோக்ஷணம் செய்துகொண்டு பின்பு நீரில் இறங்கவேண்டும்.

39 எழுத்துக்கள் உள்ள மிதியடிகளை பயன்படுத்தக்கூடாது. ( எழுத்துக்கள் ஸரஸ்வதி ஸ்வருபம்)

40 ஆத்ம குணங்களான தயை க்ஷாந்தி, அனஸூயா, ஸௌசம், அனாயசம், மங்களம், அகார்ப்பண்யம் அஸ்ப்ருஹா. இவைகளை எப்போதும் கடைபிடிக்க வேண்டும்

தர்மஸாஸ்த்ரத்தில் ஆன்னிககாண்ட சுருக்கம் முற்றியது

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

பௌராணிகர் கூறலானார். வீரா என்பவள் பேருக்கு ஏற்ற வீராங்கனை. அவளுக்கு கரந்தமன் என்னும் அரசன் கணவன். அவர்களுக்கு முதல் மகவு ஆணாகப் பிறந்தது. அதன் ஜாதகம் கணித்தவர்கள் அக்குழந்தை அளவற்ற செல்வத்தைச் சேர்ப்பான், பெரும் புகழுடன் விளங்குவான் என்று கூறினர். அவனுக்கு ஆவிக்ஷிதன் என்று பெயர் சூட்டி வேதம், வில், வாள் பயிற்சி எல்லாம் சொல்லி கொடுக்கப்பட்டன. மிகச் சிறந்த வித்வானாகவும், சூரனாகவும் இருந்த அவனை ஸ்வயம்வரத்தில் தேர்ந்தெடுக்கப் பல ராஜ குமாரிகள் தயாராக இருந்தனர். இருப்பினும் ஒரு ராஜகுமாரி தயாராக இல்லை. இது இளவரசனுக்குக் கோபம் உண்டாக்கியது. அவளை ஒரு நாள் கடத்திக் கொண்டு போய் காந்தர்வ விவாஹம் செய்து கொண்டுவிட்டான்.

அதே சமயம் விசாலி நகரில் அரசனின் குமாரிக்கு ஸ்வ்யம்வரம் நடைபெற்றது. அங்கே வந்த இளவர்சர்கள் ஆவிக்ஷிதனுக்குப் பாடம் கற்றுத்தர வேண்டும் என்று முடிவெடுத்தனர். ( இவர்கள் அவனால் தோற்கடிக்கப்பட்டவர்கள்) அத்தனை பேரையும் தான் ஒருவனே யுத்தத்தில் சமாளித்தபோதும் இறுதியில் தோற்றுப் போய் சிறை பிடிக்கப்பட்டான். விசால நாட்டு அரசன் தன் பெண்ணிடம் திருமணத்திற்கு இளவரசனை வரிக்கச் சொல்ல அவள் மனதில் ஆவிக்ஷிதனே இருந்ததால் மற்றவர்களை நிராகரித்தாள்.

தன் புத்ரனுக்கு நேர்ந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் கரந்தமனும், வீராவும் விசாலி நகரின் மீது போர் தொடுத்தனர். தன் புத்ரன் எந்த தவறும் இழைக்கவில்லை என்று கூறி மிகக் கடுமையான யுத்ததைச் செய்து அவனை விடுவித்தனர். விசாலியும் அவன் கழுத்தில் மாலையிட சித்தமானாள். ஆனால் நடந்தது வேறு.

ஆவிக்ஷிதன் போரில் தான் தோற்றதைப் பார்த்தவள் அவள். க்ஷத்ரியனுக்கு இதைவிட அவமானம் எதுவுமில்லை. எனவே திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை என்று கூற பெற்றோர்களும் மற்றவர்களும் எவ்வளவோ சமாதானப்படுத்தியும் அவன் இணங்கவில்லை. மேலும் அது நாள்முதல் தான் ப்ரம்மசர்யத்தில் இருக்கப் போவதாகவும் கூறினான். இளவரசியும் தானும் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை என்று கூறி வனம் ஏகினாள். தன் உயிரைப் போக்கிக் கொள்ள எத்தனித்த

போது தேவதூதன் ஒருவன் அவள் முன் தோன்றி '' நீ புகழ் பெறும் புதல்வனை அடைவாய்'' என்று கூறி தற்கொலையிலிருந்து அவளைத் தடுத்தான். விரக்தியுற்ற மன்னன் கரந்தமன் தன் ஆட்சியை தன் மகனிடம் ஒப்படைத்தான். அரசாட்சியில் ஒரு வழக்கமிருந்தது. பட்டம் பெறும் இளவரசன் யார் எதைக் கேட்டாலும் தர ஒப்புக் கொள்ள வேண்டும். அதன்படியே செய்ய வேண்டும். அரசகுமாரனும் தினம் யார் வந்து எது கேட்டாலும் தருவதாக வாக்குத்தர ஒரு நாள் அரசனே அவனிடம் ''எனக்குப் பேரன் வேண்டும்'' என்று கேட்டான்.

திகைத்துப் போன இளவரசன் சரி என்று வாக்கும் கொடுத்தான். இதனிடையில் வனத்திற்குச்சென்ற இளவரசி விசாலி ஓர் அரக்கனால் தூக்கிச் செல்லப்படுவதைக் கண்டு வெகுண்டு அவனை மாய்த்து அவளை மீட்டான். அப்போது இந்த விசாலியே இவன் மூலம் ப்ரசித்தியான மகனை ஈவாள் என்று ஓர் அசரீரி கூறியது. இளவரசனும் அவளை மணந்து கொண்டு மருதன் என்னும் புகழ்பெற்ற மகனை உலகுக்கு தந்தனர். நாம் என்ன செய்தாலும் விதியின் படியே நடக்கும், மேலும் ஜாதகம் கணிக்கும் ஜோதிடர்கள் கூறுவதும் பொய்க்காது என்பதற்கு இக்கதையே சாக்ஷி என்று கூறி பௌராணிகர் ஓய்ந்தார்.

(மார்க்கண்டேய புராணம்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

*அர்ஜுனன் யுத்தம் செய்ய முடியாது என்று சொல்ல க்ருஷ்ணர் கூறுகிறார்.*

*க்ருஷ்ணரின் கீதோபதேச சுருக்கம்*



*''அர்ஜுனா அழாதே ! எங்கிருந்து இந்த அலித்தன்மை வந்தது. க்ஷத்ரியனுக்கு யுத்தத்தை விட தர்மம் இல்லை. நீ போரிடவில்லையெனில் உனது கடமையிலிருந்து நழுவுகிறாய். பாபத்தை ஏற்கிறாய். நீ ஜயித்தால் உலகை ஆளலாம். தோற்றால் வீர ஸ்வர்கம் நிச்சயம். முன்பு எப்போதாவது நான் நீ இவ்வரசர்கள் ஆகியவர்களில் யாராவது இல்லாதிருந்ததில்லை. மேனிகள் அழியும். நாம் இல்லாமற் போகமாட்டோம்.*

*மரணத்தின் தன்மை சொல்வேன். மானிடர் ஆன்மா மரணம் எய்யாது. நீ விட்டுவிட்டாலும் ஓர் நாள் மேனி அழியும். எனவே மேனியைக் கொல்வாய். இல்லாததற்கு இருப்பு கிடையாது. இருப்பது இல்லாமல் போவதில்லை. உண்மை இதனை அறிவாய். இந்த ஆத்மா உலகெலாம் பரவிய பொருள் அழிவற்றதென்று அறிக. இதை அழிக்க யாராலும் முடியாது. ஆத்மா நித்யமானது நாசமற்றது, அளப்பரியது. அதன் உடலங்கள் யாவும் அழியும் தன்மையன. அதனால் யுத்தம் செய். ஆத்மா கொல்லுவதுமில்லை, கொலை யுண்பதுமில்லை. இது பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை, தேயாதது, வளராதது ஒரு போதும் இல்லாமலிருந்து உண்டானதுமில்லை. பழுதுடைய துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதிய துணிகளைப் போட்டுக் கொள்வது போன்று ஆத்மா பழைய உடல்களை நீத்து புதிய*

உடலில் புகுகிறது. பிறப்பவன் இறப்பான், இறப்பவன் பிறப்பான். இது இயற்கை. இதற்கு ஏன் நீ வருந்துகிறாய்? அழாதே யுத்தம் செய்.

சுகம், துக்கம், லாபம், நஷ்டம், ஜயம், தோல்வி இவைகளை சமமாய்ப் பார்த்து யுத்தம் செய். பாபத்திலிருந்து விலகு. நான் லோகத்தில் செய்ய வேண்டியது எதுவுமில்லை. ஆனாலும் லோகஸங்க்ரஹத்திற்காக வினை ஆற்றுகிறேன். கர்மத்தைச் செய்வதே உனக்கு அதிகாரம் அதன் பலன்களில்லை. எல்லா பலன்களையும் கர்மங்களையும் எனக்கு அர்பணித்து வினை ஆற்று.

நிஷ்காம்யனாக வினை ஆற்று. வினையின் பலன் உன்னை ஒட்டாது. உன் எதிரிலிருக்கும் வீரர்கள் நீ இல்லாமலேயே மடியப்போகிறார்கள். அவர்கள் எப்போதோ என்னால் கொல்லப்பட்டுவிட்டர்கள். அவர்கள் மரணத்தில் நீ நிமித்தமாத்ரம் இரு. எந்தப்ப்ராணியையும் பகையாதவனும், நண்பனாயிருப்பவனும், தயை உள்ளவனும் அஹங்கார மமகாரங்கள் ஒழிந்தவனும், துன்ப இன்பங்களைச் சமமாகக் கொண்டவனும் பொறுமை உடையவனும், எப்போதும் த்ருப்தி உடையவனும் உறுதியான நிச்சயத்தை உடையவனும், யோகியாய் என்னில் மனம் புத்தி செலுத்திய என் பக்தன் எனக்குப் ப்ரியமானவன். அஹங்காரத்தில் நான் யுத்தம் செய்ய மாட்டேன் என்று நீ கூறுவது அபத்தம்.

என்னிடத்தில் மனத்தை வைத்து என் பக்த்னாகி வினை ஆற்று. எல்லா தடைகளையும் இடர்களையும் தாண்டுவாய்.

அந்த வாஸுதேவனே எல்லாம் என்றுணர். பரமாத்மாவான நான் எல்லா உயிர்களிலும் உறைபவன். என் மாயையால் இவ்வுலகை ஆட்டுவிக்கிறேன் என்பதையும் உணர். எல்லா தர்மங்களையும் விட்டுவிட்டு என்னையே சரணம் அடை. எல்லா பாபங்களிலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன். அழாதே!

மறைபொருளாகிய ஞானத்தை உனக்கு இயம்பினேன். இதை முழுதும் ஆராய்ந்து விரும்பியதைச் செய். அறியமையிலிருந்து விலகி உண்மையை உணர். அதனால் யுத்தம் செய்.

அர்ஜுனன் அச்யுதா! மயக்கம் ஒழிந்தது, உனதருளால் விழிப்பு வந்தது. ஐயங்கள் அகன்று உறுதியாக உள்ளேன். உமது சொற்படி செய்வேன்.

(தொடரும்)

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ




249. **கேள்வி :** தர்ம பாடகர் யார்?

**பதில் :** வேதமறிந்தவர், வ்ரதங்களை அனுஷ்டிப்பவர், நற்குலத்தில் பிறந்தவர், நல் ஒழுக்கம் உடையவர், தர்ம சாஸ்த்ரங்களை அறிந்தவர் தர்ம பாடகர் .

250. **கேள்வி :** வ்ருத்தன் யார்?

**பதில் :** ப்ரம்மசார்ய ஆஸ்ரமத்திற்கு மேலுல்லவரை வ்ருத்தன் என்பர்.

251. **கேள்வி :** பரிஷத்திற்குத் தகுதியற்றவன் யார்?

**பதில் :** பெயரளவில் மட்டும் ப்ராம்மணனாயிருப்பவர் பரிஷத்திற்குத் தகுதி அற்றவர்.

252. **கேள்வி :** நாமதாரக ப்ராம்மணர்கள் யார்?

**பதில் :** ஸந்தயாவந்தனம் அக்னி கார்யம் செய்யாத ப்ராம்மணர்கள் நாமதாரக ப்ராம்மணர்கள் ஆவர்.

253. **கேள்வி :** ப்ராயச்சித்தம் எத்தனை வகை?

**பதில் :**

1. உபத்ஸ்தானம் பரிஷத்தை அடைவது
2. வ்ரதாதேசம் ப்ராயச்சித்தத்தை விதிப்பது
3. சர்யா அனுஷ்டானம்
4. சுத்திப்ரகாசனம் சுத்தியானது வெளிப்படுவது.

254. **கேள்வி :** ப்ராம்மணன் ஆயுதம் தரிக்கலாமா?

**பதில் :** பரீக்ஷைக்காகக் கூட தரிக்கக்கூடாது.

255. **கேள்வி :** இதற்கு விலக்கு உண்டா?

**பதில் :** உண்டு. தன்னைக் கொல்ல வருபவனிடமிருந்துத் தப்பிக்க ஆயுதம் தரிக்கலாம்.

256. **கேள்வி :** ஆததாயிகள் யார்?

**பதில் :** விஷம் வைப்பவன், நெருப்பு வைப்பவன், ஆயுதம் தரித்தவன், தனத்தைக் கொள்ளை அடிப்பவன், மனைவி மக்களைக் கவர்பவன், பூமியைக் கவர்பவன் இவர்கள் ஆததாயிகள் ஆவர்.

258. **கேள்வி :** தாமகம் என்பது என்ன?

**பதில் :** கறவை மாட்டைக் கறக்கும்போது கட்டும் கயிறு.

259. **கேள்வி :** ஸ்வைரிணீ என்பவர் யார்?

**பதில் :** தன் இஷ்டப்படி இருக்கும் பெண்ணை ஸ்வைரிணீ என்பர்.

260. **கேள்வி :** தோரகம் என்பதென்ன?

**பதில் :** ஸாதாரண மாடு கட்டும் கயிறு.

261. **கேள்வி :** பதிதன் யார்?

**பதில் :** தன் நிலையிலிருந்து பிறழ்ந்து போதல்

(தொடரும்)

# வேதோ நித்யம் அதீயதாம்

## உபநயனமான அந்தண மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

"ஜந்தூனாம் நரஜன்ம துர்லபம்
அத: பும்ஸ்த்வம் ததோ விப்ரதா"

என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர் தன்னுடைய விவேக சூடாமனி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையாரும் இதே கருத்தை கூறுகிறார். அந்தண குலத்தில் பிறந்த அனைவரும் வேதாத்யயனம் செய்ய வேண்டும் என்பது நியதி. இந்த நியதியை பல சிரமங்கள் வந்த பொழுதும் நமது முன் னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர். ஆனால் தற்பொழுது உள்ள சமுதாய சூழ்நிலைகளால் இந்த அவிச்சின்னமான வேத பரம்பரையில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்து மீண்டும் இந்த வேத பரம்பரையானது தழைத்தோங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பல ஊர்களில் பல வேத பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் பள்ளி படிப்பும் மிக முக்கியமான ஒன்றாக மாறிவிட்டதால் வேதாத்யயனம் செய்து கொண்டே பள்ளியிலும் படித்து தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பும் ஸ்ரீ சங்கர மடம் மூலம் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்பொழுது காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ தண்டபாணி ஓரியண்டல் பள்ளியில் பள்ளி படிப்பும், அதோடு சேர்ந்து வேதம், சம்ஸ்க்ருதம், மற்றும் நமது சம்ப்ரதாய பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்மொழியில் உள்ள பக்தி இலக்கியங்களும், நீதி நூற்களும் கற்பிக்கப்படும்.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால் இத்திட்டத்தில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் இரு வழிகளிலும் பயிற்சி தரப்படும். கல்வி, உணவு, தங்குமிடம் எதற்கும் கட்டணம் கிடையாது. 10 வயது முதல் 13 வயது வரையுள்ள உபநயனமான மாணவர்கள் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். பள்ளி படிப்பு முடிந்ததும் கல்லூரி படிப்புக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

பெற்றோர்கள் இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்கள் குழந்தைகளுக்கும் நமது சமுதாயத்திற்கும் வளமான எதிர்காலம் அமைய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்
R.வெங்கடசுப்ரமண்யன் :8903015221
V.P.ஸ்ரீனிவாசன் : 9445104873
G.பிரசாந்த் : 8056375421
K.ஸ்ரீராம் : 9894775434